لا إله إلا الله محمد رسول الله

நபி வழி

உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்

டிசம்பர் - 2009 விலை ரூபாய் 7/-

நுபுவ்வத்தின் வாசல் திறந்துள்ளது!

திருக்குர்ஆனிலிருந்து...

''மேலும் அல்லாஹ் நபிமார்களின் உடன்படிக்கையை வாங்கிய போது, அதாவது நான் உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் தந்து விட்டேன். பின்னர் உங்களிடம் உள்ளதை உண்மைப் படுத்தக் கூடிய தூதர் உங்களிடம் வந்தால், நீங்கள் அவர் மீது கண்டிப்பாக நம்பிக்கை கொள்ள வேண்டும். கண்டிப்பாக நீங்கள் அவருக்கு உதவி செய்ய வேண்டும். நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? என் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்களா? என்று அவன் கூறியதற்கு, ஆம் நாங்கள் ஒப்புக் கொள்கிறோம் என்று அவர்கள் கூறினர். நீங்கள் சாட்சியாக இருங்கள்; நானும் உங்களுடன் சாட்சியாக இருக்கிறேன் என்று அவன் கூறினான்''. *(3:82)*

''மேலும் நாம் நபிமார்களிடம் அவர்களின் உடன்படிக்கை வாங்கியபோது, உம்மிடமும், நூர், இப்ராஹீம், மூஸா, மர்யமின் மகன் ஈசா ஆகியோரிடமும், நாம் அவர்களிடம் உறுதி வாய்ந்த உடன்படிக்கை ஒன்றை வாங்கினோம்''. *(33:8)*

(குறிப்பு: இந்த 33:8 வசனம் 3:82-ல் உள்ள கருத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அதாவது ஒவ்வொரு நபிக்கும், அவருக்குப் பின்னர் தோன்றும் நபியைப் பற்றிய நற்செய்தி கூறப்பட்டு, அவரது சமுதாயம் அவர் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று அதற்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. இதைப் போன்றே காத்த முன்னபிய்யீன் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமும் உறுதிமொழி வாங்கப்பட்டுள்ளது என்பதை 33:8ல் உள்ள 'உம்மிடமும்' என்ற சொல் உறுதிப்படுத்துகின்றது.)

நபிமொழியிலிருந்து...

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''எனக்கும் அவருக்கும் (அதாவது இந்த உம்மத்தில் தோன்றவிருக்கும் ஈசாவுக்கும்) இடையில் எந்த நபியுமில்லை. மேலும் (ஈசாவாகிய) அவர் தோன்றுவார்''. ***(அபூதாவூது கிதாப் மலாஹிம் பாப் குருஜுத் தஜ்ஜால்)***

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா என்று கூறுங்கள். ஆனால் அவருக்குப் பிறகு நபி இல்லை என்று கூறாதீர்கள். ***(துர்ரே மன்சூர், தொகுதி 5, பக்கம் 204, தக்மிலா மஜ்மவுல் பிஹார் பக்கம் 85)***

இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நூல்களிலிருந்து...

''நுபுவ்வத் என்பதால் என் கருத்து, நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக நின்று, நுபுவ்வத்திற்கான வாதம் செய்கிறேன் என்பதோ அல்லது புதிய ஒரு ஷரீஅத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் என்தோ அல்ல. நவூதுமில்லாஹ். நுபுவ்வத் என்றால் இறைவனுடன் அதிகமான அளவில் உரையாடுவதாகும். அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதால் கிடைக்கின்றது. எனவே இறைவனுடன் உரையாடும் கொள்கையை நீங்களும் ஏற்றுக் கொள்கின்றீர்கள். எனவே இது வெறும் சொல் அளவிலான தர்க்கம்தான். அதாவது நீங்கள் எதனை இறைவனுடன் உரையாடுதல் என்று பெயர் வைத்திருக்கின்றீர்களோ அதுவே அதிக அளவில்

தொடர்ச்சி 14-ம் பக்கம்...

தொடர் : 9

தக்தீரே இலாஹி (இறை நியதி)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)

சில நேரங்களில் காரணிகள் உபயோகிக்கப்படுவது ஏன்?

சிலநேரங்களில் அடியார்கள் மூலமாகக் காரணிகள் ஏன் உபயோகம் செய்ய வைக்கப்படுகிறது? காரணிகளின்றியே ஏன் வேலைகள் நடைபெறுவதில்லை என்றொரு கேள்வி இங்கு எழுகிறது.

இதுபற்றி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவெனில்:

1. காரணிகளின்றியே எப்பொழுதும் வேலை நடைபெறுவதென்றால் நற்கூலியைப் பெறுவதற்கு கட்டாயத் தேவையாக இருக்கின்ற மறைவானவற்றின் மீதான நம்பிக்கை என்பது வீணாகிவிடும். அதுமட்டுமின்றி அடியாரின் செயலும் இறை கருணையை ஈர்க்கக் கூடியதாக இருக்கிறது. எனவே 'விதியும்' இருக்கிறது; அத்துடன் இறை கருணையை ஈர்ப்பதற்காக இறைவன் காரணிகளையும் உபயோகிக்க வைக்கிறான்.

தக்தீரின் பாதையில் காரணிகள் ஒரு தடையாக இருக்கவும் முடியாது; இருப்பதுமில்லை. எனினும் அடியாரின் பலவீனம் மற்றும் இயலாமை இறை கருணையை ஈர்ப்பதற்கு ஒரு வழிகோலாக இருக்கிறது.

2. காரணிகளைக் கையாளுமாறு இட்ட கட்டளையின் ஒரு நோக்கம் அடியாருக்கு தன் முயற்சியின் பலவீனங்களைத் தெரியப் படுத்துவது மாகும். காரணிகளின்றியே வேலை நடைபெற்றால், நான் இந்த வேலையைச் செய்தால் எப்படிச் செய்திருப்பேனோ? தெரியவில்லையே என மனிதன் பலமுறை யோசிப்பான்.

ஆனால் அவன் கூடவே செயல்படவும் செய்யும்போது தன் முயற்சி மிக பலவீனமானது என்பதும் அதற்கு எதிராக அல்லாஹ்வின் அருள் எந்த அளவுக்கு வேலை செய்துள்ளது என்பதும் அவனுக்குத் தெரியவரும்.

சுருக்கமாக, முயற்சி மனிதனுடைய ஈமானை வலுப்படுத்துகிறது. இந்த வேலை நம் பொறுப்பில் மட்டும் இருந்தால் நமது முயற்சி இதுவரைதான் எட்டியிருக்கும்; கடைசியில் நான் தோல்வியைக் காண நேர்ந்திருக்கும் என மனிதன் பார்த்துக் கொண்டே செல்வான். இல்லையெனில் தக்தீர் என்பது அவனுக்கு சாதாரணமாக நடக்கும் ஒரு நிகழ்ச்சியாகத் தோன்றும்; அத்துடன் சோம்பேறித்தனமும் அதிகமாகி விடும்.

காரணப் பொருள்களைப் பயன் படுத்துதல் என்பது பற்றி நான் ஓர் உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன். ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் வெற்றி பெறுவார்கள்; அவர்களின் விரோதிகள் தோல்வியடைவார்கள் என்றும் தக்தீர் இறங்கியிருந்தது. எந்தவொரு காரணியும் இன்றி மக்கள் தத்தமது வீடுகளில் உட்கார்ந்து கொண்டே நோய்வாய்ப்பட்டு மரணித் திருந்தால் இது தற்செயலாக நிகழ்ந்த ஒன்று; மக்களாகப் பிறந்தவர்கள் இறக்கத் தான் செய்வார்கள் என்று அனைவரும் கூறிவிடுவர். ஆனால் இறைவனோ (அவ்வாறு கூற வழியில்லாத வகையில்) இந்த தக்தீரை (விதியை) காரணிகளின் மூலம் வெளிப்படுத்தி தன் வல்லமைக்கு சிறந்த சான்றினை வழங்கியுள்ளான்.

பத்ர் போரில் நடந்த ஒரு சம்பவம் இந்த விஷயத்தைத் தெளிவுபடுத்துகிறது. அப்துர்

ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) கூறுகின்றார்கள்: இன்று எதிரிகளை எதிர்த்துப் போரிட்டு வெல்ல வேண்டும் என என் மனம் விரும்பியது. (ஏனெனில் காஃபிர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையே நடைபெறுகின்ற முதல் போராகும் அது. அதில் ஒருபுறம் முஸ்லிம்களின் பரம விரோதியான அபூஜஹிலும் மறுபுறம் இறைவனும், அவனது தூதரும் இருந்தார்கள். முஸ்லிம்களுக்கு காஃபிர்கள் செய்த அநியாயங்கள் ஒவ்வொன்றாக நினைவிற்கு வந்தன). போரில் வலப்புறமும் இடப்புறமும் ஆற்றல் மிக்க போர் வீரர்கள் இருந்தால் தான் ஒரு போராளியால் நன்கு போரிடமுடியும் என்பது எல்லாரும் அறிந்ததே.

நானும் எனது வலப்புறத்தையும் இடப்புறத்தையும் பார்த்தேன். எனது மன வேதனைக்கு அளவேயில்லை. ஏனெனில் நான் என் இருபக்கத்திலும் 14-15 வயதினைக் கொண்ட அன்சார் மக்களின் இரு சிறுவர்களைக் கண்டேன். அவர்களைப் பார்த்ததுமே இன்று நாம் என்ன போரிடப் போகிறோம்? என என் உள்ளத்தில் தோன்றியது. இந்த எண்ணம் என் மனத்தில் தோன்றியதுதான் தாமதம். அவ்விரு சிறுவர்களில் ஒருவன் என்னை முழங்கையால் இடித்தான். அடுத்தவன் கேட்டு விடக் கூடாதே என்பதற்காக என் காதில் மிக மெதுவாகக் கேட்டான் சித்தப்பாவே! அபூஜஹல் என்பவன் யார்? அவனைக் கொன்று விடவேண்டும் என மனம் நாடுகிறது. ஏனெனில் அவன் அல்லாஹ்வின் தூதருக்கு மாபெரும் கொடுமையிழைத்துள்ளான் என்றான்.

அவனுடைய இப்பேச்சைக் கேட்டு நான் வியப்படைந்தேன். ஏனெனில் இந்த எண்ணம் எனக்கு கூடத் தோன்றவில்லை. அச்சிறுவனின் இந்த பேச்சை நான் கேட்டு முடிப்பதற்குள் இன்னொரு சிறுவன் மறுபுறம் முழங்கையால் என்னை இடித்தான். அடுத்தவன் கேட்டுவிடக் கூடாதே என்பதற்காக அவனும் 'சித்தப்பாவே! அபூஜஹில் யார்? அவன் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் மீது அதிகமாக அநீதியிழைத் துள்ளான் என கேள்விப்பட்டிருக்கிறேன்' என்று கூறினான். இதனைக் கேட்டபிறகு நான் இன்னும் அதிக வியற்பிற்காளானேன்.

நான் அபூஜஹிலின் பக்கம் சுட்டிக் காட்டியதும் அவனைச் சுற்றி மாபெரும் வீரம் மிக்க போர் வீரர்கள் நின்று கொண்டிருந் ததையும் அவ்விரு சிறுவர்கள் அதனையும் பொருட்படுத்தாது பாய்ந்து சென்று அபூஜஹிலின் மீது தாக்குதல் புரிந்தனர். நாலாப் புறத்திலுமுள்ள வாளின் தாக்குதலிலிருந்து தம்மைக் காத்துக் கொண்டவர்களாய் அபூஜஹிலை அடைந்தே விட்டார்கள். மேலும் அவனைக் காயப்படுத்தி கீழே தள்ளிவிட்டார்கள்.

காஃபிர்களை அழித்தொழிப்பதற்காக போரை ஏற்படுத்தியதும், அவர்களை எதிர்த்து முஸ்லிம்கள் போரிடுவதும் ஒரு காரணியாக இருந்தது என்பது இச்சம்பவத்திலிருந்து தெரிய வருகிறது. ஆயினும் இந்த முயற்சியின் பலவீனமே ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்காக இறைவன் வெளிப்படுத்திய அந்த தக்தீரின் மகிமையை எடுத்துக் காட்டுகிறது.

ஆனால் இந்த முயற்சி இல்லாமலிருந்தால் இந்த தக்தீரின் மகத்துவமும் இந்த அளவுக்கு வெளிப்பட்டிருக்காது. மேலும் நபித் தோழர்களுக்கு தமது பலவீனம் மற்றும் அல்லாஹ்வின் மகிமை பற்றி இப்போது தெரிந்து கொண்டது போன்று தெரிந்திருக்க முடியாது. உண்மையில் அவர்கள் தமது வாள்களிலேயே இறைவனுடைய பளிச்சிடும் வாளைக் கண்டு கொண்டார்கள். 13,14 வயது சிறுவர்களால் எவ்வாறு அபூஜஹிலைக் கொல்ல முடியும்? ஆனால் அவர்கள்

கொன்றனர். இந்தப் போரில் கொல்லப்பட்ட மற்றவர்களின் நிலையும் இதுவேயாகும். இந்தக் காரணத்தாலேயே இந்தப் போரைப் பற்றி, 'எனவே அவர்களை நீங்கள் கொல்லவில்லை; மாறாக அல்லாஹ்வே அவர்களைக் கொன்றான்' என்று இறைவன் கூறியுள்ளான்.

(திருக்குர்ஆன் 8:18)

பின்னர் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களைக் குறித்து இவ்வாறு கூறினான்:

'நீர் எறிந்தபோது நீர் எறிய வில்லை: மாறாக அல்லாஹ்வே எறிந்தான்''. (8:18)

காஃபிர்களின் மீது கற்களை எறிந்தது ஹஸ்ரத் நாயகம் (ஸல்) அவர்கள் தான் என்றாலும் அப்போது காற்றை வேகமாக அடிக்கச் செய்தது இறைவனே; அவன்தான் எதிரிகளைப் போர் செய்ய முடியாதவாறு ஆக்கிவிட்டான். ஆகவே அந்தச் செயல் இறைவன் செய்ததாகவே குறிப்பிடப் பட்டுள்ளது.

எனவே தக்தீர் (இறைநியதி) வெளியாகும்போது சில சமயங்களில் காரணிகள் ஏதும் இல்லை என்பதை வெளிப்படுத்துவதற்காகவே காரணிகள் வைக்கப்படுகின்றன.

3. மூன்றாவது, தக்தீர் (விதி) விதிக்கப்பட்டிருந்தாலும் அத்துடன் காரணிகளைப் பயன்படுத்துவதற்கும் கட்டளை இடப்படுகிறது. மனிதனுக்கு உழைப்பு, முயற்சி ஆகியவற்றிற்கான கூலி கொடுப்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது. உதாரணமாக, நபித் தோழர்களின் வெற்றியை போர் எனும் காரணிகளுடன் சம்பந்தப்படுத்தியதனால் அவர்களுக்கு போர் செய்ததற்கான நற்கூலியும் கிடைத்தது. போர் செய்யாமலேயே வெற்றி கிடைத்திருந்தால் இந்த நற்கூலி எங்கிருந்து கிடைத்திருக்கும்?

(நபித் தோழர்கள் வெற்றி பெறுவார்கள் என்ற) இந்த தக்தீருக்கு அந்த நபித் தோழர் களுடைய வாளின் தேவை இல்லையென் றாலும் அந்த தக்தீருடன் செயல்படுவதற்கான தேவை சஹாபாக்களுக்கு இருந்தது. அப்போதுதான் நற்கூலி அவர்களுக்குக் கிடைக்க முடியும்.

இவையே தக்தீருடன் காரணிகளைக் கையாள்வதற்கான முப்பெரும் காரணங் களாகும்.

இப்போது எழும் கேள்வி என்னவென்றால், தக்தீரில் சில நேரங்களில் காரணிகளைக் கையாள்வது தடுக்கப்படுகிறதே? அது ஏன்? என்பதாகும்.

இது தொடர்பாக நினைவில் வைத்துகொள்ள வேண்டியது என்னவெனில், இறைவன் சில நேரத்தில் எவ்வித காரணிகளும் இன்றி தக்தீரை (இறை நியதியை) வெளிப்படுத்தி அதன் மூலம் அவன் நம்பிக்கை கொண்டவர்களுக்கு தன் மகிமையையும் மகத்துவத்தையும் காட்ட விரும்புகின்றான். அவனது ஆற்றலுக்கு முன்னால் அனைத்து காரணிகளும் வீணானவை; இறைவன், தான் விருப்பியதைச் செய்து காட்டுகிறான் என்பதை உணர்ந்து கொள்வதற்காகவே அவன் அவ்வாறு செய்கிறான்.

விதி மாறுமா?

விதி மாறுமா? என்பதற்கு நான் தற்போது விடையளிக்கிறேன். ஆம் விதி மாறலாம் என்பதே இதற்குரிய சுருக்கமான விடையாகும்.

தக்தீர் என்றால் 'தீர்ப்பு' என்று பொருள். மேலும் எவர் தீர்ப்பு வழங்குகிறாரோ அவரால் அந்தத் தீர்ப்பை மாற்றவும் முடியும். தீர்ப்பு வழங்கியபின் அதனை மாற்ற முடியாம லிருப்பது பலவீனத்தின் அறிகுறியாகும். அது இறைவனிடத்தில் இருக்க முடியாது.

விதி எவ்வாறு நீங்குகிறது?

தக்தீர் (இறைநியதி) எவ்வாறு நீங்க முடியும் என்பது பற்றி நான் இப்போது கூறுகிறேன்.

முதலில், சாதாரண இயற்கை விதி, மற்றொரு சாதாரண இயற்கை விதியினால் நீங்கி விடக் கூடும். உதாரணமாக, தீ பட்டால் துணி எரிந்து விடும் என்பது சாதாரண இயற்கை விதி. அப்போது ஒரு துணியை எரிப்பதால் அது எரிகிறது என்றால், சாதாரண இயற்கை விதி அதில் ஏற்பட்டு விட்டது என்று கூறப்படும். ஆனால் அதே சமயத்தில் இன்னொரு 'விதி'யும் உண்டு. அதாவது, நெருப்பின் மீது நீரைக் கொட்டி விட்டால் அது அந்த நெருப்பை அணைத்து விடுகிறது. இவ்வாறு ஒரு சாதாரண இயற்கை விதி இன்னொரு சாதாரண இயற்கை விதியை அகற்றி விடுகிறது.

ஆகவே, சாதாரண விதி நீங்க முடியும். அதுவும் அந்த சாதாரண விதிக்கு நேர் எதிராக மற்றொரு விதியை ஏற்படுத்தி அதனை அழித்து விடுவதன் மூலம் நீங்கலாம்.

நீங்கள் கொடுத்த உதாரணத்தின் மூலம் தத்பீர் (முயற்சி) தக்தீரை (விதியை) மாற்றியுள்ளது என்பதுதான் தெரியவருகிறதே தவிர ஒரு தக்தீர் இன்னொரு தக்தீரை மாற்றியதாக வரவில்லையே? ஏனெனில் நீரை மனிதன்தானே ஊற்றுகிறான் என்று எவராவது கூறுவாரேயானால், நீரை மனிதன் ஊற்றுகிறான் என்றால், நெருப்பையும்தான் சில நேரங்களில் மனிதன் அறிந்தோ அறியாமலோ மூட்டி விடுகிறான். எனவே முதலில் உள்ள செயலை 'தக்தீர்' (நியதி) என்று கூறுவதைப் போலவே இரண்டாவது செயலையும் தக்தீர் என்று கூறுகிறோம்.

இன்னொரு விஷயம் என்னவெனில், ஏற்கனவே குறிப்பிட்டது போன்று மனிதனுடைய செயல் தக்தீர் ஆகவே முடியாது. (நாம் குறிப்பிட்டுள்ள சில சூழ்நிலைகளிலேயே தவிர). நெருப்பு எரிதல், மற்றும் நெருப்பு அணைதல் என்று நாம் கூறியதன் கருத்து அதனை மனித செயலின் பக்கம் சுட்டிக் காட்டுவதன்று. மாறாக, எரிதல் மற்றும் அணைதல் என்ற தன்மையை சுட்டிக் காட்டுவதாகும். (அதாவது நெருப்பினால் எரிப்பதும், நீரினால் அணைப்பதும் மனிதன்தான் என்றாலும் அந்த தன்மையை அதில் உருவாக்கியது மனிதன் அல்லன்.) ஆகவே ஒரு தக்தீர் (இறை நியதி) இன்னொரு தக்தீரை (இறை நியதியை) மாற்றிவிட்டது என்று கூறுவதே சரியானது. அவ்வாறில்லாமல் இறைவன் எரியக் கூடிய தன்மையை நெருப்பில் வைக்காவிட்டால் ஒரு பொருளை யாரால்தான் எரித்து விட முடியும்? அவ்வாறே நீரில், அணைக்கும் தன்மையை இறைவன் வைத்திருக்காவிட்டால், அதன் மூலம் யார் நெருப்பை அணைத்து விட முடியும்?

இதே போன்று இன்னொரு உதாரணத் தைப் பாருங்கள். ஒருவர் அதிகமாக மிளகாய் சாப்பிட்டு விட்டார். அது அவரது குடலைத் தின்று விடுகிறது. இது தக்தீர் ஆகும்.

இதற்கு எதிராக அவர் இன்னொரு தக்தீரின் (இறைநியதியின்) மூலம் பலன் பெறுகிறார். அதாவது, நெய் அல்லது வேறு ஏதாவது கொழுப்புப் பொருட்களை உட்கொள்கிறார். அதனால் அரிப்பு நீங்கி, சுகம் பெறுகிறார். இது முதல் தக்தீரை அழித்து விடுகிறது.

இதைவிட மேலான ஓர் உதாரணம் ஹஸ்ரத்

National Watch Company
Opposite to Bus Stand
Somanur, Tiruppur

Chennai Hardwares
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373

உமர் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவமாகும். அப்போது இஸ்லாமிய படையில் பிளேக் நோய் பரவியது. அந்தப் படையின் தளபதியான ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் நோய்கள் இறைவனுடைய விதியின்படியே வருகின்றன எனக் கருதினார்கள். இதனால் அந்நோயி லிருந்து தப்பிப்பதற்கான வழி முறைகளைக் கையாள்வதையும் அவர்கள் அவ்வளவு முக்கியமானதாகக் கருதவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்படையை நோக்கிச் சென்றதும், முஹாஜிரீன் மற்றும் அன்சார் சகோதரர்களின் ஆலோசனையின்படி அவர் களைத் திரும்பி விடுமாறு கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள், 'அஃபிராரும் மின் கத்ரில்லாஹ்' என்று கேட்டார்கள். அதாவது உமர் அவர்களே! தாங்கள் அல்லாஹ்வின் தக்தீரிலிருந்து வெருண்டோடுகின்றீர்களா? எனக் கேட்டார் கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நஅம். நஃபிர்ரு மின் கத்ரில்லாஹி இலா கத்ரில்லாஹ் 'ஆம்! நாம் இறைவனுடைய தக்தீரிலிருந்து வெருண் டோடி இறை தக்தீரின் பக்கமே செல்கின்றோம்' என்று பதிலளித்தார்கள். இது முஸ்லிம்களுக்கு ஒரு துஆவில் கற்றுக் கொடுக்கப்பட்ட அதே கருத்துதான். இந்த துஆவை ஒவ்வொரு முஸ்லிமும் தூங்குவதற்கு முன்னர் ஓதவேண்டும்; அதற்குப் பிறகு எதுவும் பேசக் கூடாது என்று ஒவ்வொரு முஸ்லிமிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அந்த துஆவில் வருவதாவது:

''லா மல்ஜஅன் வலா மன்ஜா மின்க இல்லா இலைக.''

பொருள் : எங்கள் இறைவா! உன்னுடைய கோபத்திலிருந்து தப்பிப்பதற்கும், அதிலிருந்து அடைக்கலம் பெறுவதற்கும் உன்னுடைய சன்னிதானத்தைத் தவிர வேறெந்த இடமும் இல்லை.

ஒரு தக்தீரை விடுத்து மற்றொரு தக்தீரின் பக்கம் செல்வதன் உதாரணம், ஒரு கை வெறுமையாகவும் மற்றொரு கையில் உணவும் இருக்கின்ற ஒருவரைப் போன்றதாகும். அவர் வெறுமையான கையை விடுத்து மற்றொரு கையின் பக்கம் செல்லும்போது நீங்கள் இந்தக் கையிலிருந்து வெருண்டோடுகின்றீர்களா? என்று ஒருவர் அவரிடம் கேட்டால், நான் இதிலிருந்து ஓடவில்லை; மாறாக, மற்றொரு கையின் பக்கம் கவனம் செலுத்தினேன் என்றுதான் பதில் கூறுவார்.

(2) சாதாரண இயற்கை விதி இன்னொரு சாதாரண இயற்கை விதியால் நீக்கப்படுவதைப் போன்றே சாதாரண இயற்கை விதியை சிறப்பான இயற்கை விதியைக் கொண்டும் நீக்க முடியும்.

ஒருவருக்கெதிராக உலகியல் காரணிகள் ஒன்று சேர்கின்றன. அவரால் அதனைச் சமாளிக்க முடியாது என்றாலும் அந்த மனிதர் இறைவனுடைய அருளைக் கவர்ந்து இறைவனின் சிறப்பான விதியின் மூலம் அதனைச் சமாளித்து நீக்கி விடமுடியும். எடுத்துக் காட்டு, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் சம்பவம். நெருப்பு, எரிக்க வேண்டும் என்பதுதான் சாதாரண விதி. ஆனால் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்காக சிறப்பு தக்தீர் (விதி) வெளியானது. எனவே நெருப்பால் அவர்களை எரித்து விட முடியவில்லை; நெருப்பின் தீங்கிலிருந்து அவர் காப்பாற்றப்பட்டார்.

அவ்வாறே கொலையுண்டு போகும் தன்மை மனிதனுக்கு இருக்கிறது. இது சாதாரண விதியாகும். எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி இறைவன், 'மேலும் அல்லாஹ் உம்மை மனிதர்களிடமிருந்து காப்பாற்றுவான்' என்று கூறியுள்ளான். (5:68) எனவே அவர்களை உலகத்தால் கொலை செய்யவே முடியாது. ஏனெனில் சாதாரண

விதியை சிறப்பு விதி மாற்றி விட்டது. இவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனும் நடந்தது.

(3) சாதாரண இயற்கை விதி மற்றொரு சாதாரண இயற்கை விதியாலும், சிறப்பான இயற்கை விதியாலும் நீங்குவதைப் போன்றே சிறப்பான இயற்கை விதி மற்றொரு சிறப்பான இயற்கை விதியால் நீங்கலாம். எவ்வாறென்றால், ஒருவருடைய சில குறிப்பிட்ட நிலைமைகளுக்கேற்ப அவருக்கு குறிப்பிட்ட ஒரு கட்டளையிடப்படுகிறது. பின்னர் அவர் தன்னிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்கிறார். அதனால் அந்த கட்டளையும் மாற்றப்படுகிறது.

உதாரணமாக, ஒருவர் அல்லாஹ்வின் மார்க்க வழியில் குறிப்பாக தடையாக நிற்கிறார். மேலும் மக்களை வழி கெடுக்கிறார். அவருக்கு மரணத்தைக் கொடுக்க வேண்டுமென அல்லாஹ்வின் புறமிருந்து கட்டளையிடப் படுகிறது. ஆனால் சில நேரத்தில் அந்த மனிதர் அக்கட்டளை செயல்படுவதற்கு முன்னரே பாவ மன்னிப்புத் தேடுகிறார். அல்லது ஓரளவு சீர்திருத்தம் செய்து கொள்கிறார் என்றால் அல்லாஹ்வின் புறமிருந்தும் முதலில் இடப்பட்ட கட்டளை ரத்து செய்யப்பட வேண்டுமென்ற கட்டளை கிடைத்து விடுகிறது.

சிறப்பான தக்தீர் பிறிதொரு சிறப்பான தக்தீரால் மாறி விடுவதற்கான உதாரணம், பாதிரி அப்துல்லாஹ் ஆத்தமின் சம்பவமாகும். அவர் புத்தகத்திலும் வாய்வழியாகவும் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களை அவமானப்படுத்த விரும்பினார். மேலும் அவர்களை 'தஜ்ஜால்' என்று கூறினார். (நவூதுபில்லாஹ்). அதிலேயே பிடிவாதமா யிருந்தார். நபி கரீம் (ஸல்) அவர்களின் பிரதிநிதியும் இறைவனால் நியமிக்கப்பட்ட வருமான ஹஸ்ரத் வாக்களிக்கப் பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு விவாதம் செய்தார். அப்போது, 'அவர் உண்மையின் பக்கம் திரும்பாவிட்டால் 15 மாதத்திற்குள் அழிவுக்காளாவார்' என்ற இறைவனின் (விதி) வெளியானது. இது சிறப்பு விதியாகும். ஆனால் அவர் பயந்து விட்டார். நான் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றி அவ்வாறான வார்த்தையை உபயோகிக்கவில்லை என்று பகிரங்கமாக கூறியது மட்டுமல்லாது, தீய சொற்களை விட்டுவிட்டு அமைதியாக வாய் மூடியிருந்தார். எனவே இந்த தக்தீர் நீங்கிவிட்டது.

ஒருவர் வாளேந்தி இன்னொருவரைத் தாக்க, மற்றொருவர் நீ என்னோடு சண்டையிடுகிறாய். எனவே நானும் உன்னைக் கொல்லப் போகிறேன் என்று கூற, இதனைக் கேட்ட முதலாமவர் தன் வாளை கீழே தாழ்த்தி விட்டால் அது அவர் சண்டையிலிருந்து திரும்பி விட்டார் என்றே கருதப்படும். அந்த முதலாமவர் சண்டையை விட்டதோடு நில்லாமல் மற்றவரைக் கட்டி அரவணைக்கவும் வேண்டும் என்பது கட்டாயமில்லை.

ஆத்தமைப் பற்றி 'அவர் உண்மையின் பக்கம் திரும்ப வேண்டும்' என்பது நிபந்தனையாக இருந்தது; அதன் பொருள் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதேயாகும் என நம்மை எதிர்ப்பவர்கள் கூறுகின்றனர். நாம் கூறுகிறோம்: உண்மையின் பக்கம் திரும்புதலில் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் மகிமையும் வந்து விடுகிறது. மனிதன் தவறான வழியை விட்டு விட்டு, நேரான வழியின் பக்கம் வருதல் என்பது மட்டும் அதற்குப் பொருளல்ல. உண்மையின் பக்கம் மீண்டும் மீண்டும் கவனம் செலுத்துவதும் உண்மையின் பக்கம் திரும்புதலேயாகும். அப்படியிருக்கும்போது உண்மையின் பக்கம் திரும்புதல் என்பதற்கு, 'அப்துல்லாஹ் ஆத்தம் நபிமார்களின் அந்தஸ்தைப் பெற வேண்டும். அதன்

பிறகுதான் அவனை மன்னிக்க வேண்டும்' என்றா பொருள் கொடுப்பது?

உண்மையில் 'உண்மையின் பக்கம் திரும்புதல்' என்பதற்கு முஸ்லிமாகி விடுதல், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளுதல், இறைவழியில் உயிர் துறந்த தியாகிகளுள் உள்ளவராக மாறுதல், சித்தீக் (உண்மையாளர்) ஆக மாறுதல் போன்ற பல படித்தரங்கள் உள்ளன. அத்துடன் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களை ஏசுகின்ற ஒருவர் அதிலிருந்து விலகி விடுவதும் உண்மையின் பக்கம் திரும்புதலேயாகும். இவ்வகையான திருப்பம் ஆத்தமிற்கு ஏற்பட்டது. எனவே அவர் அதன் பலனைப் பெற்றார்.

அவர் குறித்து வெளியான சிறப்பு விதியை இன்னொரு சிறப்பு விதி நீக்கி விட்டது. மேலும் இறைவனுடைய கருணை எனும் பண்பு தன் மிகைப்புத் தன்மையை நிரூபித்துக் காட்டி விட்டது.

முன்னறிவிப்பும் விதி நீங்குவதும்

நபித்துவத்தின் உண்மைக்கு முன்னறிவிப்புகளுடன் அதிக தொடர்பு உண்டு. மேலும் முன்னறிவிப்புகள் நீங்குவதனால் நபிமார்களின் எதிரிகளுக்கு கூச்சலிடக் கூடிய வாய்ப்பு கிடைக்கின்றது. மேலும் முன்னறிவிப்புகள் என்பது தக்தீர் என்ற விவகாரத்தின் ஒரு கிளையேயாகும். எனவே தக்தீருக்கும் முன்னறிவிப்புகளுக்கும் என்ன தொடர்பு என்பதையும் நான் எடுத்துக் கூறி விடுகின்றேன்.

முன்னறிவிப்புகள் இரு வகைப்படும். ஒன்று, இறைஞானத்தை வெளிப்படுத் துவது; இன்னொன்று இறை வல்லமையை வெளிப் படுத்துவது. தக்தீரின் இவ்விரு அம்சங்களையும் புரிந்து கொள்ளாத காரணத்தாலேயே முஸ்லிம்கள் இவ்விஷயத்தில் பெரும் ஏமாற்றத்திற் குள்ளாகியிருக்கிறார்கள்.

இந்துக்களிடத்தில் மறுபிறவிக் கொள்கை உருவானதும் தக்தீரின் இந்த அம்சத்தைப் புரியாததனாலேயேயாகும். இந்துக்கள் கேட்கின்றனர்: ஒரு குழந்தை ஏன் குருடாகப் பிறக்கிறது? அது தனது முற்பிறவியில் செய்த செயலுக்கு தண்டனையாகவே அவ்வாறு குருடாகப் பிறக்கிறது என்கின்றனர்.

ஆனால் உண்மை என்னவென்றால் இறை நியதி இரு வகைப்படும் 1. இயற்கை விதி, 2. மார்க்க சட்ட விதி.

இந்துக்கள் கேட்கின்றனர்: ஒரு குழந்தை ஏன் நொண்டியாகப் பிறக்கிறது? குற்றமில்லாமல் அதனை ஊனமுற்றதாகப் படைத்ததற்கு இறைவன் அநியாயக்காரனா என்ன? எனவே அது தனது முற்பிறவியில் சில தீமைகளைச் செய்திருக்கவேண்டும். அதற்குத் தண்டனை யாகத்தான் அது அவ்வாறு படைக்கப்பட் டுள்ளது என்று அவர்கள் முடிவெடுக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு இந்த ஏமாற்றம் இரண்டு தவறுகளின் காரணமாக ஏற்பட்டிருக்கின்றன.

(தொடரும்)

தமிழில்:

மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A

Parveen Enterprises
Dealers : Papers, Boards & Binding Materials
Vadapalani, Chennai 600 026.

M.Rafique & Sons
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பற்றி

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

1. ''(மிர்ஸா குலாம் அஹ்மது ஆகிய) நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களை மறுப்பவன் அல்லன்.

'லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்பதே எனது கொள்கை. அவர்களைப் பற்றி 'வலாகின் ரஸூலல்லாஹி வ காத்தமன் னபிய்யீன்' என்பதன் மீது நான் ஈமான் கொண்டுள்ளேன் என்று நான் இறைவன்மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன்.

எனது இந்தக் கருத்து உண்மைதான் என்பதற்கு, இறைவனுக்கு எத்தனைப் பெயர்கள் இருக்கின்றனவோ அத்தனை முறை சத்தியம் செய்கிறேன். திருக்குர்ஆனில் எத்தனை எழுத்துக்கள் உள்ளனவோ அத்தனைமுறை சத்தியம் செய்கிறேன். இறைவனிடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எத்தனைத் தகுதிகளைப் பெற்றள்ளார்களோ அத்தனை முறை சத்தியம் செய்கிறேன்.

இறைவனது கூற்றக்கும் இறை தூதரது கூற்றுக்கும் மாற்றமான எந்தக் கொள்கையும் எனது கொள்கை இல்லை. அவ்வாறு மாற்றமான ஒரு கொள்கையை நான் கொண்டுள்ளதாக எவராவதும் நினைத்தால், அது அவரது தவறாகும்.

நான் இந்த அளவிற்கு எனது கொள்கையைப் பற்றிக் கூறிய பிறகும் என்னைக் காஃபிர் என்று எவரும் கருதினாலோ காஃபிர் தீர்ப்பு கொடுத்தாலோ அவர் மரணம் அடைந்த பிறகு அதற்காக இறைவனிடத்தில் பதில் சொல்லியாக வேண்டும் என்பதை அவர் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளட்டும்.

இறைவனிடத்தும் இறை தூதரிடத்தும் நான் கொண்டுள்ள ஈமானை ஒரு தராசுத் தட்டிலும் இந்தக் காலத்திலுள்ள மற்ற எல்லாரது ஈமானை மற்றொரு தட்டிலும் வைத்து நிறுத்தால், இறைவனது அருளால் எனது ஈமானே கூடுதலாக இருக்கும் என்பதை இறைவன் மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன்''.

(கராமாத்துஸ் ஸாதிகீன் : பக்கம் 25)

2. ''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒரு பக்கம் வைத்து மறுபக்கம் அவர்களுக்கு முன்னர் சென்று விட்ட எல்லா நபிமார்களும் ஒன்றாக இணைந்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது போதனையையும் சீர்திருத்தத்தையும் போன்ற ஒன்றினைச் செய்து விட நினைத்தால், அது ஒரு போதும் முடியாததாகும்.

ஏனென்றால் நம் நபிக்குக் கிடைத்த உள்ளமும் ஆன்மீகச் சக்தியும் மற்ற நபிமார்களுக்குக் கிடைக்கவில்லை. நபிமார்களைப் பற்றிய எனது இந்தக் கருத்து மரியாதை குறைவானது (நவூது பில்லாஹ்) என்று எவராவது கருதினால், அவர் அறிவற்றவராவார்; என்மீது இட்டுக்கட்டிப் பொய்க் கூறுபவராவார்.

நபிமார்களுக்குக் கண்ணியமும் மரியாதையும் அளிப்பது எனது ஈமானின் ஒரு பகுதி என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சிறப்பு, மற்ற நபிமார்களது சிறப்பைவிட, பன்மடங்கு உயர்வானது என்பது எனது ஈமானின் மிகப் பெரும் பகுதியாகும். இந்தக் கருத்து எனது இரத்த நரம்புகளில் எல்லாம் இரண்டறக் கலந்து விட்ட ஒன்றாகும். இந்தக் கருத்தினை மாற்றுவது எனது சக்திக்கு அப்பாற்பட்டதாகும்.

துர்பாக்கியமும் பிடிவாதமும் கொண்ட மாற்றுக் கருத்துக் கொண்டவர், தமது விருப்பம் போல் என்ன வேண்டுமானாலும்ம் சொல்லட்டும். எனது கருத்து இதுவே! நம்முடைய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்கள் என்னென்ன சாதனைகள் புரிந்தார்களோ அவற்றை, மற்ற நபிமார்கள் தனித்தனியாகவோ எல்லாரும் ஒன்று சேர்ந்தோ ஒருபோதும் செய்ய முடியாது. இது இறைவனது அருளாகும். இதனை அவன் தன் விருப்பத்திற்குரியவர்களுக்கே வழங்குகிறான்''.
(அல் ஹகம்: பக்கம் 2, 17-1-1901)

3. ''நம் தலைவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெற்ற ஆன்மீகச் சிறப்பின் மூலம் மற்றெல்லா நபிமார்களையும் வென்று விட்டார்கள். இது எப்படி என்றால், ஏனைய நபிமார்களது ஆன்மீகச் சிறப்பு, ஒரு குறிப்பிட்ட கால வரையரைக்குள் இருந்து முடிந்து விட்டது. இப்பொழுது அந்த நபிமார்களின் உம்மத்துகள் (சமுதாயங்கள்) உயிரற்ற உடல்களாக உள்ளன.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஆன்மீகச் சிறப்பு, கியாமத் நாள் வரை (உலக இறுதி நாள் வரை)த் தொடர்கிறது. அவர்கள் இத்தகு சிறப்பைப் பெற்றிருப்பதால், மற்ற உம்மத்துகளிலிருந்து எந்த மஸீஹும் வரமுடியாது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நிழலில் வளர்த்து வருவது கூட, மிகத் தாழ்ந்த ஒருவரை மஸீஹாக உருவாக்கிவிடும். இவ்வாறு அவர்களது நிழலில் வளர்ந்ததால்தான் அடியேனாகிய நானும் உருவானேன்''.

(சஷ்மயே மஸீஹ் : பக்கம் 75)

4. ''இன்று முழு உலகிலும் தவ்ஹீது (இறைவன் ஒருவனே என்னும் கொள்கை) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்திலேயே தவிர வேறெந்த உம்மத்திலும் காணப்படவில்லை. கோடிக்கணக்கான மக்களை ஒரே இறைவன் என்ற கொள்கையின் மீது நிலைத்திருக்கச் செய்து மிகச் சிறந்த போதனையால் உண்மையான இறைவனை அடையாளம் காட்டும் வேத நூல் திருக்குர்ஆனைத் தவிர வேறெந்த வேத நூலும் இல்லை. அதற்குரிய அறிகுறிகற் கூட பிற வேத நூல்களில் காணப்படவில்லை.

ஏனைய சமுதாயத்தினர்களும் தத்தமக்கு எனச் செயற்கை இறைவனை உருவாக்கிக் கொண்டார்கள். ஆனால் முஸ்லிம்களின் இறைவனோ செயற்கையான இறைவன் அல்லன். என்றென்றுமுள்ள - எந்த மாற்றமும் பெறாத - நிலையான தன்மைகளைப் பெற்ற இறைவனாக உள்ளான்''.
(பராஹீனே அஹ்மதிய்யா: பாகம் 2, பக் 125)

5. ''இறைவனிடமிருந்து இல்ஹாமை (இறையறிவிப்பை)ப் பெற்றுக் கொள்ளும் பாக்கியத்தை, உண்மையான மார்க்கமாகிய இஸ்லாத்தில் - உம்மத்தே முஹம்மதிய்யாவில் - நிலைத்து நிற்பவர்களுக்கே அவன் வழங்குகிறான்; மறைவான செய்திகளை அவர்களுக்கு அறிவிக்கின்றான்.

உண்மையான மனத்துடன் திருக்குர்ஆனை இறைவசனம் என்று உறுதி கொண்டு, உண்மையான பற்றுடன் அதிலுள்ள கட்டளைகளின்படி நடந்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறைவனின் உண்மையான - முழுமை பெற்ற நபி என்றும் எல்லா நபிமார்களையும் விட மிகச் சிறந்த நபி என்றும் காத்தமுன்னபிய்யீன் என்றும் அவர்களே நேரான வழியைக் காட்டித் தருபவர்கள் என்றும் உறுதி கொள்கின்ற நம்பிக்கையாளருக்கு மட்டுமே அந்தத் தூய்மையான இல்ஹாமைப் பெற்றுக் கொள்ளும் பாக்கியத்தை அவன் வழங்குகிறான்.

யூதர்கள், கிறிஸ்தவர்கள், ஆரியர்கள், பிராமணர்கள் முதலிய வகுப்பினர்களுக்கு அந்த இல்ஹாம் ஒருபோதும் கிடைக்காது. ஆனால் திருக்குர்ஆனை முழுமையாகப் பின்பற்றி நடப்பவர்களுக்கு அது எப்பொழுதும் கிடைத்தது; இப்போதும் கிடைக்கிறது; இனிமேலும் கிடைக்கும்.

புதியதொரு ரிஸாலத்தை (புதியதொரு ஷரீஅத்துச் சட்டத்தை)க் கொண்டுள்ள வஹீ, அவசியமில்லையாதலால், அது முடிவு பெற்று விட்டது. எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் உண்மையான தொண்டர்களுக்கு இல்ஹாம் கிடைக்கிறது.

அது ஒருபோதும் நிற்காது. நமக்குக் கிடைக்கும் அந்த இல்ஹாம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையான நபி என்பதற்கு மிகப் பெரிய சான்றாகும். இந்தச் சான்றுக்கு முன்னால் இஸ்லாத்தை மறுப்பவர்களும் எதிர்ப்பவர்களும், இழிவும் கேவலமும் அடைகிறார்கள்''. *(பராஹீனே அஹ்மதிய்யா; பாகம் 3, பக்கம் 216, அடிக்குறிப்பு 11)*

6. ''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சிறந்த குணங்கள் எந்த அளவு உயர்ந்தவை என்பதைப் பாருங்கள். வயது முதிர்ந்த கிழவியும் அவர்களது கையைப் பிடித்துக் கொண்டால், அவர்கள் எழுந்து நின்று, அவள் கூறும் செய்திகளை மிகக் கவனமாகக் கேட்பார்கள். அவள் தாமாக ட பெற்றுச் செல்லும்வரை பொறுமையாக இருப்பார்கள்''. *(அல் ஹகம் : 17.9.1910)*

7. ''லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ், என்பதே நமது மார்க்கத்தின் சாராம்சமாகும். மதிப்பிற்குரிய நம் தலைவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், காத்தமுன்னபிய்யீன் நபிமார்களுள் மிகச் சிறந்தவர்கள். அவர்களின் மூலமே மார்க்கமும் இறையருளும் முழுமை பெற்றன. அவர்களது மார்க்கமாகிய இஸ்லாத்தின் மூலமே மக்கள் நேரான வழியினைப் பெற்று இறைவனை அடைய முடியும் என்பதே இவ்வுலகில் நாம் கொண்டிருக்கும் கொள்கையாகும். இந்தக் கொள்கையுடனேயே நாம் இறைவனருளால் இவ்வுலகிலிருந்து பிரிந்து செல்வோம்''. *(இஸாலா அவ்ஹாம் : பாகம் 1, பக்கம் 137)*

8. ''மதிப்பிற்குரிய காத்தமுல் முர்ஸலீன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவரும் நம்முடைய நேர்வழி காட்டியோ, இமாமோ, தலைவரோ அல்லர். அவர்களையே நாமும் பின்பற்றுகின்றோம்; மற்றவர்களையும் அவர்களையே பின்பற்ற வைக்கின்றோம்''. *(இஸாலா அவ்ஹாம்: பாகம் 1, பக்கம் 182)*

9. ''இஸ்லாத்தைத் தவிர வேறு எதுவும் நமது மார்க்கம் அன்று. எல்லாம் அறிந்த இறைவனது வேதமாகிய திருக்குர்ஆனைத் தவிர வேறு எதுவும் நமது வேதமன்று. காத்தமுன் னபிய்யீன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த தூதரும் நம்மவர் அல்லர். இறைவன் அவர்களின் மீது தனது ஆசீர்வாதங்களையும் கருணைகளையும் அருள்வானாக. அவர்களின் விரோதிகளைச் சாபத்தற்குரியவர்களாக ஆக்குவானாக''.

(அஞ்சாமே ஆத்தம் : பக்கம் 142)

10. ''இஸ்லாமிய ஷரீஅத்துச் சட்டத்தில் ஒரு கடுகளவும் குறைத்தலையோ, ஒரு கடுகளவு கூட்டுதலையோ, சில கடமைகளை விட்டு விடுதலையோ, செய்யக் கூடாத ஒன்றினைச் செய்வதற்குரிய அடிப்படையை உருவாக்குதலையோ எவர் செய்தாலும், அவர் ஈமானை இழந்தவரும் இஸ்லாத்தை விட்டு அப்பாற்பட்டவரும் ஆவார் என்பது நமது ஈமானாகும்.

நான் என் ஜமாஅத்தாகிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்குக் கட்டளையிடுகிறேன்: அவர்கள் உண்மையான மனத்துடன் 'லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்னும் கலிமா தய்யிபாவின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டு அந்த நம்பிக்கையுடனேயே மரணமடைய வேண்டும். திருக்குர்ஆனால் நிரூபிக்கப்பட்ட எல்லா நபிமார்கள் மீதும் எல்லா வேதங்களின் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

தொழுகை, நோன்பு, ஸகாத்து, ஹஜ்ஜு ஆகியவற்றையும் இறைவனாலும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களாலும் விதிக்கப்பட்ட எல்லா கடமைகளையும் கடமைகள் என ஒப்புக் கொண்டு நடக்க வேண்டும். எல்லா விலக்கல்களையும் விலக்கல்கள் என ஏற்றுக் கொண்டு எந்த அளவு சரியாக நடக்க முடியுமோ அந்த அளவு சரியாக - இஸ்லாம் கூறியவாறு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

முன்னர் சென்றுவிட்ட இஸ்லாமியச்

சான்றோர்களால் இஸ்லாம் என்று கூறப்படும் கொள்கை, செயல்முறை ஆகியவற்றின் ஒருமித்த முடிவுகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நடைமுறைகளைப் பின்பற்றியவர்களது ஒருமித்த கருத்துக் களையும் ஒப்புக் கொள்வது கடமையாகும். எங்கள் கருத்து இதுதான் என்பதற்கு விண்ணுலகும் மண்ணுலகும் சாட்சி.

மாற்றுக் கருத்துக் கொண்ட எவரும், இந்தக் கருத்துக்கு மாற்றமான ஒன்றினை எங்களது மீது இட்டுக்கட்டுவார் என்றால், அவர் நேர்மை, நாணயம் தக்வா (இறையச்சம்) முதலியவற்றை அலட்சியம் செய்து விட்டு நம் மீது இத்தகு பொய்யினைக் கூறும் பாவத்திற்கு ஆளாகின்றார்.

அவர் நமது நெஞ்சத்தை எப்பொழுது திறந்து பார்த்து, மேலே கூறிய அந்தக் கொள்கைக்கு மற்றமான கொள்கை, நமது நெஞ்சத்தில் இருப்பதாக எப்படிக் கண்டு பிடித்தார் என்று நாம் மறுமை நாளில் அவரிடம் வாதிப்போம்.

'பொய்யர்களின் மீதும் இட்டுக் கட்டுபவர்களின் மீதும் இறைவனது சாபமும் கோபமும் உண்டாவதாக' என்ற இறைவசனத்தை மாற்றுக் கருத்துக் கொண்டவர்களுக்கு நினைவு படுத்துகிறேன்.

(அய்யமுஸ் ஸுல்ஹ் : பக்கம் 86, 87)

11. ''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலமே நாம் இறையருள்களையும் அபிவிருத்திகளையும் பெற்றுள்ளோம். அவனது திருக்குர்ஆன் மூலமே எமக்கு இறை ஞானங்கள் அருளப்பட்டன. எனவே இந்தக் கருத்துக்கு மாற்றமான ஒரு கருத்தை எவரும் தமது மனத்தில் கொள்ளாமலிப்பதே அவருக்கு நன்மையாகும். இல்லையெனில் அவர் இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும்.

உண்மையாகவே நாங்கள் இஸ்லாத்தின் தொண்டர்கள் இல்லையெனின், எங்களது எல்லா நடவடிக்கைகளும் முயற்சிகளும் வீணானவை - வெறுக்கத்தக்கவை - தண்ட னைக்குரியவையே ஆகும்''.

(அல் ஹகம் : பக்கம் 6, 17.8.1899)

12. ''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒரு நபி என்று மட்டுமன்று, எல்லா நபிமார்களையும் விட மிகச் சிறந்த நபி என மிக நன்றாகத் தெரிந்து வைத்திருக்கின்றோம். எனவே மிகச் சிறந்த கருத்து ஒன்றினை, வேறு எவரும் சொல்லியிருப்பதாகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனைச் சொல்லவோ செய்யவோ இல்லை என்று சொல்பவனை எம்மால் ஒருபோதும் சகித்துக் கொள்ளவோ தாங்கிக் கொள்ளவோ முடியாது.''

(அல் ஹகம்: பக்கம் 2, 17.10.1904)

13. ''இறை வேதமாகிய திருக்குர்ஆனை விட்டு விடுவதையோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவு படுத்துவதையோ எம்மால் ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது. நான் இவ்வாறான கொள்கையைக் கொண்டிருப்பதால், முழு உலகமும் என்னைக் கைவிட்டாலும், அதனைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஏனென்றால், இறைவன் என்னுடன் இருக்கின்றான்''.

(அல் ஹகம் : பக்கம் 10, 17.11.1905)

14. ''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிமார்களின் காத்தம்; திருக்குர்ஆன் வேதங்களின் காத்தம். எனவே இப்பொழுது ஒரு புதிய கலிமாவுக்கோ ஒரு புதிய தொழுகைக்கோ அறவே இடமில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லியும் செய்தும் காட்டியதை விட்டு விட்டு, திருக்குர்ஆனில் சொல்லப்பட்டதை விட்டு வேறு எதன் மூலமாவது நஜாத்து (நகரத் தண்டனையிலிருந்து விடுதலை) பெற எவராவது விரும்பினால், அது நடக்க முடியாத காரியம் ஆகும்.

எவர் அந்த இரண்டினையோ ஒன்றினையோ அந்த இரண்டில் ஏதாவதொன்றில் ஒரு கடுகளவு விட்டு விடுதலையோ செய்தாலும், அவர் நரகத்திற்கே செல்வார். இதுவே எங்களது கருத்தும் கொள்கையுமாகும்''.

(அல்ஹகம் : பக்கம் 4, 24.1.1904)

15. ''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஈமான் கொள்ளுதல் என்பது பற்றி எனது கொள்கை இதுவே: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழைப்பு, ஒருவருக்குக் கிடைக்கின்றது; அவர்கள் தோன்றி விட்டது பற்றிய செய்தியும் அவருக்குக் கிடைக்கிறது; அவர்கள் நபிதான் என்பதற்குரிய சான்றுகளையும் அவர் பெறுகிறார். இவ்வளவு இருந்தும் அவர் குஃப்ரிலேயே (மறுத்தலிலேயே) மரணம் அடைந்தால், அவர் நீண்ட நெடுங்கல நரக தண்டனையை அடைவார்.

(ஹகீகத்துல் வஹீ : பக்கம் 178, 179)

தமிழில் :

மவ்லவி P.M. **முஹம்மது அலி** H.A.

திருச்சி

2-ம் பக்க தொடர்ச்சி...

கிடைக்கும்போது அதற்கு **இறைகட்டளைக்கு ஏற்ப நான் நுபுவ்வத் என பெயர் வைக்கின்றேன்''.** *(ததிம்மா ஹகீகத்துல் வஹீ பக்கம் 68)*

''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளைவிட்டும் தனிப்பட்டு நுபுவ்வத்திற்கான வாதம் புரிபவர் மீது சாபம்தான். ஆனால் (எனது) இந்த நுபுவ்வத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நுபுவ்வத்துதான். எந்தவொரு புதிய நுபுவ்வத்தும் அல்ல. மேலும் இ(ந்)த (நுபுவ்வத்தி)ன் நோக்கமும், இஸ்லாத்தின் உண்மையை உலகத்தின் மீது வெளிப்படுத்துவதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மையை வெளிப்படுத்துவதும் தான்''.

(சஷ்மயே ம∴ரி∴பத் பக்கம் 325)

''இக்காலத்தில் நபி என்ற சொல்லினால் இறைவனின் கருத்து, ஒருவர் முழுமையான முறையில் இறைவனுடன் உரையாடும் சிறப்பைப் பெறுகிறார் என்பதும் அவர் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக இறைவனால் நியமிக்கப்படுகிறார் என்பதுமாகும். அவர் இன்னொரு ஷரீஅத்தைக் கொண்டு வருகிறார் என்று பொருள் அல்ல. ஏனெனில் ஷரீஅத் ஹஸ்ரத் நபிகள் நாயம் (ஸல்) அவர்களுடன் முடிந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எவர் மீதும் நபி என்ற சொல்லை பொருத்துவது ஆகுமானதல்ல - அவரை உம்மத்தீ என்று சொல்லாதவரை. அதன் பொருள், அவர் ஒவ்வொரு அருளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதனால் பெற்றாரேயொழிய நேரடியாகப் பெறவில்லை என்பதாகும்''.

(தஜல்லியாத்தே இலாஹிய்யா பக்கம் 9)

''எனக்கு இந்த எல்லா சிறப்புகளும் ஒரு நபியைப் பின்பற்றியதால் கிடைத்திருக்கிறது. அம் மாநபியின் உயர் பதவிகளையும், அந்தஸ்துகளையும் உலகம் அறியாது. அவர்தான் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்''.

(செஷ்மயே மஸீஹி பக்கம் : 24)

''இறுதியாக ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு உம்மத்தீ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதனால் அவர் வஹி, இல்ஹாம், நுபுவ்வத்தின் அந்தஸ்தைப் பெறுகிறார் என்றால், நபி என்ற பெயரால் கண்ணியப்படுத்தப்படுகிறார் என்றால் அதனால் நுபுவ்வத்தின் முத்திரை உடைந்துவிடாது. ஏனெனில் அவர் உம்மத்தீ (உம்மத்தைச் சேர்ந்தவர்) ஆவார். அவருக்கென்று தனிப்பட்ட எந்த தகுதியுமில்லை. அவருடைய சிறப்பு, பின்பற்றப்பட்ட (ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அ) வர்களின் சிறப்பாகும். மேலும் அவர் நபி என்றும் மட்டும் அழைக்கப்பட மாட்டார்; நபி என்னும் மும்மத்தீ என்னும் அழைக்கப் படுவார்வார். ஆனால் உம்மத்தீ அல்ல ஒரு நபி மீண்டும் வருவது கத்மே நுபுவ்வத்திற்கு மாறுபட்டதாகும்''.

(சஷ்மயே மஸீஹி பக்கம் 68)

மனிதன் ஏன் உயிரினங்களை பலியிடுகின்றான்?

தியாகம் செய்ய வேண்டிய அவசியம் என்ன? பிற உயிரை அழிப்பதால் என்ன பலன்? என்று மக்களுள் பலர் கேட்கின்றனர். ஆனால் உண்மையில் தியாகம் செய்தவதற்கும் பயிற்சி தேவைப்படுகிறது. எந்தவொரு வேலையையும் பயிற்சியின்றி செய்துவிட முடியாது. எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. சிறு வயதில் தச்சர் எங்கள் வீட்டில் வேலை செய்து வந்தார். நாங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு வந்ததும் தச்சருடைய கருவிகளை வேடிக்கைப் பார்ப்போம். தச்சரோ தன் கருவிகளை தொடவிடமாட்டார். ஒருநாள் தச்சர் தன் கருவிகளை எங்கள் வீட்டிலேயே விட்டு சென்று விட்டார். எனவே, எனக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. நானும் எனது நண்பர்களும் சேர்ந்து தச்சரின் கருவிகளை எடுத்து விளையாடினோம். நான் உளியை எடுத்து ஒரு அடி அடித்துப் பார்த்தேன். அவ்வளவுதான். அது என் விரலில் பட்டுவிட்டது. அந்த அடையாளம் இன்றும் என் விரலில் இருக்கின்றது.

இந்த சம்பவத்திலிருந்து நான் சொல்ல வருவது என்னவென்றால், எந்த வேலையையும் பயிற்சியில்லாமல் செய்துவிட முடியாது. ஆனால், வெளிப்படையாக தச்சர் வேலை செய்வதைப் பார்க்கும்போது இதைவிட மேலாக நம்மால் செய்துவிட முடியும் என்று கருதுகின்றோம். செய்யும்போதுதான் கஷ்டம் புரிகின்றது.

இதே போன்று மனிதன் இறைவனுடைய வழியில் உயிரையும் தியாகம் செய்வதற்கு தயாராக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். மேலும் வெளிப்படையான பலி இல்லாமல் இந்த வேலை நடைபெற முடியாது. இரத்தம் சிந்தக்கூடிய பயிற்சி மனிதனுக்கு இல்லை யென்றால் தன் உயிரைக் கொடுக்கத் தயாராகும் மனநிலை அவனுக்கு உருவாக முடியாது.

பழங்களையும், காய்கனிகளையும் மட்டுமே உட்கொள்பவர்கள் ஒரு வீரனோடு சண்டையிட்டு இரத்தம் சிந்த ஒருபோதும் தயாராக மாட்டார்கள். (அந்த அளவுக்கு அவர்களுக்கு தைரியம் இருப்பதில்லை). ஏன் பசுவதையை எதிர்த்துப் போராடும் இந்துக்கள் காய்கனிகளை மட்டுமே சாப்பிட்டுக் கொண்டிருந்த போதிலும் அவர்கள் முஸ்லிம்களைக் கொன்று விடுகிறார்களே இது அவர்களிடம் உள்ள தைரியத்தை வெளிப்படுத்தவில்லையா? என்று சிலர் கேட்கலாம். ஆனால், இது அவர்கள் செய்யும் தியாகமல்ல. (எனவே இதனை வைத்து அவர்களிடம் தைரியம் உள்ளது என்று சொல்வதற்கில்லை.) மாறாக அவ்வாறு செய்வது அவர்களிடமுள்ள கோழைத்தனத்தை காட்டுகிறது. மற்றபடி எவர்களிடம் ஆற்றலும் வல்லமையும் உள்ளதோ அவர்கள் பிறரை அழித்துவிடுவதில் தைரியம் காட்ட மாட்டார்கள். மாறாக அவர்கள் (எதிரிகளுக்கு) வாய்ப்பு கொடுக்கிறார்கள். நான் பலமுறை பூனைக்கும் எலிக்கும் உள்ள கதையை கூறியிருக்கிறேன். அதாவது பூனை எலியை பிடித்து விட்டு பிறகு விட்டு விடுகின்றது. எலி ஓடும்போது மீண்டும் பூனை அதனை பிடித்துக் கொள்கிறது. இந்த செயல் மூலம் எலி தன்னுடைய பிடியிலிருந்து வெருண் டோடிவிட முடியாது என்பதை பூனை எலிக்கு உணர்த்த விரும்புகிறது.

எனவே பிறரை முற்றிலும் அழித்தொழிப் பதற்காக முயற்சிப்பது கோழைத்தனத்தின் அடையாளமாகும். வீரமுள்ள மனிதன் தம் விரோதி முற்றிலும் அழிந்துவிடாதிருக்கும் அளவிற்கே நஷ்டம் இழைப்பான். உலகில் எந்த அளவுக்கு பெரும் பெரும் வீரர்கள் தோன்றி யுள்ளார்களோ அவர்கள் அந்த அளவுக்கு மன்னிக்கும் குணத்தையும் கொண்டுள்

ளார்கள். இதற்கு நேர்மாறாக எத்தனையோ கோழைகளும் இருக்கிறார்கள். அவர்கள் பிறரை அழிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தம் விரோதிகளை அழித்துக் கொண்டே சென்றனர். ஆனால் பகைவர்களை வெற்றிக் கொண்ட பின்பு தண்டனை என்ற முறையில் அவர்களுக்கு தேவையான அளவுக்கு மட்டும் துன்பம் கொடுத்து பிறகு மன்னித்து விடுவதுதான் உண்மையான வீரமாகும்.

சுருக்கமாக பயிற்சியின்றி மனிதன் தியாகம் செய்யத் தயாராக முடியாது. இந்த பயிற்சிதான் இந்த (ஈதுல் அழ்ஹா) பெருநாளின்போது பயிற்றுவிக்கப்படுகிறது. அதாவது இறைவனுக்காக இரத்தம் சிந்த தேவைப்படும்போது இரத்தம் சிந்தவும், இரத்தம் சிந்துவதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் என்ற கட்டளை வரும்போது தவிர்ந்து கொள்ளவும் கூடிய மனப்பக்குவம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே மனிதன் இந்தப் பெருநாளில் தன் கைகளால் உயிரினங்களை பலியிடுகிறான். இதன்படி இந்த (ஹஜ் மாத) நாட்களில் இரத்தமும் சிந்தப்படுகிறது. இரத்தம் சிந்துவது தடுக்கப்பட்டுமிருக்கிறது. முஸ்லிம்கள் (ஹஜ்ஜுப் பெருநாளாகிய) இன்று இரத்தம் சிந்துகிறார்கள். அதாவது குர்பானி கொடுக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு பத்து பன்னிரண்டு நாள்களுக்கு முன்னரே மக்காவில் வேட்டையாடுவது (அதாவது இரத்தம் சிந்துவது) தடுக்கப்பட்டிருக்கிறது.

சுருக்கமாக, குர்பானி செய்யுமாறு கட்டளையிடும்போது குர்பானி செய்வதும், இரத்தம் சிந்தாதீர்கள் என்று கட்டளையிடும் போது தவிர்ந்து கொள்வதுமாகிய இவ்விரு பயிற்சிகளையும், இறைவன் இந்தப் பெருநாளின் மூலமாக நமக்கு கற்றுத் தந்துள்ளான். ஆகவே, இந்தப் பெருநாளில் இருவிதமான காட்சிகளும் வைக்கப்பட்டுள்ளன. இது வீரத்தையும் தைரியத்தையும் ஏற்படுத்துவதற்கென நியமிக்கப்பட்ட பயிற்சி பற்றிய உவமை வடிவமாகும். இதிலிருந்து பலன் பெற்றவர்களாய் நாம் உண்மையான தியாகத்திற்காக தயாராக வேண்டும். மேலும் நம் ஜமாஅத்தில் இந்த இரண்டு வகையான தியாகங்களையும் செய்பவர்கள் உருவாக வேண்டும். உலக விஷயங்களில் முன்னேறிச் சென்று தம்முடைய செல்வத்தை இறைவனுடைய மார்க்கத்திற்காக செலவு செய்யக் கூடியவர்களும் நம் ஜமாஅத்தில் இருக்கவேண்டும். மார்க்க சேவையில் தம்மை முழுக்க முழுக்க அர்ப்பணித்து அதற்காக இரவு பகலாக உழைக்கின்றவர்களும் நம் ஜமாஅத்தில் இருக்க வேண்டும்.

இறைவன் நம் ஜமாஅத்தில் இத்தகைய இரண்டு விதமான மக்களையும் உருவாக்குவானாக. அவ்விரு மக்களும் தத்தமது நல்லெண்ணத்திற்கேற்ப தத்தமது பணிகளை தொடர்ந்து செய்து வரவேண்டும். அவ்வாறு தொண்டு செய்வதை அவர்கள் தமக்குக் கிடைத்த அருளாக நினைக்க வேண்டும். உலக விஷயங்களில் தாம் முன்னேற்றமடைந்து மார்க்கத்திற்காக அதிகம் வழங்கிவிட்டதாக பெருமையடிப்பவர்கள் நம் ஜமாஅத்தில் உருவாகக் கூடாது. அதே போன்று மார்க்கத்திற்காக தம்மை அர்ப்பணித்த பிறகு தமது தியாகத்திற்கு மதிப்பளிக்கப்படவில்லை என்று சொல்பவர்களும் நம் ஜமாஅத்தில் உருவாகக் கூடாது. அவர்களின் தியாகமெல்லாம் இறைவனுக்காக இருக்க வேண்டும். மேலும் அவனிடமிருந்தே அதற்குரிய பிரதிபலனையும் எதிர்பார்க்க வேண்டும்.

(இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் முஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் 20-5-1929 அன்று ஆற்றிய ஈதுல் அல்ஹா பேருரையிலிருந்து)

M. மன்சூர் அஹ்மது

தொடர் : 4

ஏகத்துவப் போராளிகள்

ஹஸன் அபூபக்கர்

9. தாமஸ் எமிலின் (கி.பி. 1663 - 1742)

இவர் கேம்பிரிட்ஜ் சென்று தமது படிப்பை முடித்துக்கொண்டு டப்ளினுக்குத் திரும்பி வந்து அங்கு மதபோதகர் என்று பெயரில் மிகவும் பிரபலம் அடைந்தார். பத்து ஆண்டுகளில் அவரது புகழ் உச்சக்கட்டத்தை அடைந்தது. 1702ல் அவரது கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர், ஆலயங்களில் பிரச்சினைக்குரிய வாசகங்களையும் முக்கடவுள் கொள்கைக்கு ஆதரவான வாதங்களையும் அவர் தவிர்த்து வருவதாக ஒரு பிரச்சனையைக் கிளப்பினார். இச்சூழலில் முக்கடவுள் கொள்கைளைக் குறித்து அவரது கருத்து என்ன என்று கேட்கப்பட்டபோது, அவர் தமது கருத்துக்களை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இறைவன் ஒருவன் என்றே தாம் நம்பி வருவதாக அவர் ஒப்புக்கொண்டதுடன், இறைவன் தனித்தவன் மற்றும் மிக உன்னதமானவன் என்றும் கூறிவிட்டு, இயேசு கிறிஸ்து அந்த இறைவனிடமிருந்தே அனைத்து சக்திகளையும் அதிகாரங்களையும் பெற்றதாகக் கூறினார். சபையினருக்குத் தமது கருத்தை ஏற்க விருப்பமில்லையெனில், தாம் பதவி துறந்து விடுவதாகவும் அவர் தெரிவித்தார். சபை உறுப்பினர்கள் இதனை ஏற்காவிடினும், அவர் தம் பதவியைத் துறந்து இங்கிலாந்து சென்றுவிட்டார். சிறிது காலம் கழித்து டப்ளினுக்குத் திரும்பி வந்து தம் குடும்பத்தாருடன் மீண்டும் இங்கிலாந்து திரும்புவதற்குள், 1703ல் அன்னார் கைது செய்யப்பட்டு ஒரு மதவிரோதியாக குற்றம் சுமத்தப்பட்டார். **'இயேசு கிறிஸ்து பற்றிய வேதாகம் விளக்கம்' என்ற ஏகத்துவக் கொள்கையை விளக்கும் ஒரு நூல் வெளியிட்டதற்கு** அவரே முழுப்பொறுப்பு எனக் கண்டுபிடிக்கப்பட்டது. யோவான் 14:28ல் 'என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்' என்று இயேசு கூறுவதை அடிப்படையாகக் கொண்டு இயேசு கடவுளுக்கும், மனிதனுக்கும் இடையே வந்த ஒரு மத்தியஸ்தர் என்று எமிலின் அறிவித்தார். **இவ்வாறு அவர் தேவனிடமிருந்து இயேசுவைத் தனியாகப் பிரித்ததன் மூலம் முக்கடவுள் கொள்கையை ஒழித்துக் கட்டினார்** என்று கூறலாம். இந்நிலையில்தான் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இறுதி விசாரணையின் போது, 'இயேசு கிறிஸ்து உன்னதமான தேவன் இல்லை' என்று அறிவிக்கின்ற ஒரு பைபிளை எழுதி வெளியிட்ட குற்றத்திற்காக அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டது. ஒரு வருட சிறைத்தண்டனை அல்லது ஆயிரம் பவுண்டு அபராதம்; இந்த இரண்டில் ஒன்று என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அவர் மேல்முறையீடு செய்தபோது பல நீதிமன்றங்களுக்கு இழுத்தடிக்கப்பட்டு, மதவிரோதி என்ற பெயரில் மக்கள் முன்னிலையில் அவமானப் படுத்தப்பட்டார். பின்னர் அரசு, தண்டனையை 70 பவுண்டுகளாகக் குறைத்தது. அதனைச் செலுத்தி விட்டு, சிறைச்சாலையிலிருந்து வெளியே வந்து அயர்லாந்தை விட்டும் வெளியேறினார் எமிலின். இவ்வாறு முக்கடவுள் கொள்கையை மறுத்து ஏகத்துவக் கொள்கையை ஆதரித்து சிறப்புக்குரிய பெரியோர்களிடம் அவர் இணைந்து விட்டார்.

உன்னதமான தேவனோடு ஒப்பிடுகையில் சக்தியிலும், அதிகாரத்திலும் குறைந்த மனிதர்களைச் சுட்டிக்காட்டுவதற்கும் தேவன் என்ற சொல் பைபிளில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நியாயாதிபதிகளும், தேவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். சில வேளைகளில் மனிதர்களே தேவர்களாகவும் அழைக்கப்பட்டுள்ளனர். மோசே ஆரோனின்

தேவனென்று இருமுறை அழைக்கப் பட்டுள்ளார். பின்னர் பார்வோனின் தேவன் என்றும் அழைக்கப்பட்டுள்ளார். உன்னதமான தேவனோ எல்லையற்றவன். அவன் இவர்கள் யாவரினும் மேலானவனாக இருப்பதால், மற்ற எல்லாரிடத்தும் 'அவன்' வேறுபட்டிருக் கிறான். இவையே தாமஸ் எமிலினின் கருத்துக்களாகும்.

கிறிஸ்து தேவர்களின் தேவனானவனுக்குக் (1 கொரிந்தியர் 8:5) கீழானவர் என எமிலின் முடிவு கட்டுகிறார். இந்த முடிவுக்கு வர அவர் கேட்ட கேள்வி: இயேசு கிறிஸ்து தமக்கு மேலான தேவனாக ஒருவனை வைத்துள்ளாரா? தம்மைவிட மாபெரும் அதிகாரம் கொண்டவனும், மாபெரும் வல்லமை உடையவனுமாகிய ஒருவன் உண்டா இல்லையா? இந்த கேள்விக்குரிய விடையில் இயேசுவின் நிலையை முடிவு கட்டும் பதில் உள்ளது. இயேசுவுக்கு மேலே அவருக்கொரு கடவுள் (தேவன்) இருந்தால் அவர், (அதாவது இயேசு) சர்வ வல்லமையுள்ள உன்னதமான தேவனாக இருக்கமாட்டார் அல்லவா? எமிலின் தமது பதிலுக்கு ஆதரவாக மூன்று வாதங்களை முன் வைத்துள்ளார்.

(1) தம்மைத் தவிர வேறொரு தேவனைக் குறித்து இயேசு திட்டவட்டமாகக் கூறுகிறார். பலமுறை அவர் என் தேவனென்றும் என் பிதாவென்றும் மற்றொரு தேவனைக் குறித்துச் சொல்கிறார். (யோவான் 20:17) 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்...' என்று அவர் உரக்க சப்தமிட்டதிலிருந்து, தேவன் அவரை விட்டு வேறுபட்டவன் எனத் தெளிவாகத் தெரிகிறது.

(2) அவரது தேவன் அவரைவிட மிகவும் மேலானவர் என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார். இதையே அப்போஸ்தலர்களும் தெளிவாகக் கூறுகின்றனர். பல சந்தர்பபங்களில் தாம் பிதாவுக்குக் கீழானவர் என்பதை உரக்கக் கூறுகிறார். தமது பிதா தம்மை விட மிகப்பெரியவர் எனப் பறைசாற்றுகிறார். தமது பிதாவின் பெயராலேதான் எதையும் தாம் செய்வதாகக் கூறுகிறார்.

(3) உன்னதமான தேவனுக்கேயுரிய எல்லையற்ற பண்புகள் இயேசுவிடம் இல்லாததால் அவர் தேவனிடமே வேண்டுதல் புரிகிறார். எல்லையில்லாத நிறைபண்புகள், எல்லையற்ற வல்லமை, வரையறை இல்லாத அறிவு போன்ற எல்லை கடந்த குணங்கள் தம்மிடம் இல்லை என இயேசு தெளிவுபடக் கூறியுள்ளார். அதி உன்னதமான தேவனுக்கே இவை யாவும் சொந்தமானவை. இம்மூன்று கருத்துக்களையும் சாமானியர்களும் புரிந்து கொள்ளும் அளவுக்குப் பரவலாக யாவருக்கும் எடுத்துரைக்க வேண்டும் என்பது தாமஸ் எமிலினுடைய கொள்கையாகும்.

புராட்டஸ்டண்டு தலைவர்களின் மத்தியில், முக்கடவுள் கொள்கை தவறானது என நிரூபித்தவர்களில் முதன்மையானவர் எமிலின் ஆவார். 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிஷப் ஏரியாஸின் ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொண்டோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து நின்றது. எமிலினுடைய விசாரணைக்குப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இயேசு தேவனா? இல்லையா? என்ற கேள்வியின் விளைவாக இங்கிலாந்து திருச்சபையில் ஒரு பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. 1712ல் சாமுவேல் கிளார்க்கில் 'முக்கடவுள் பற்றிய வேதாகமக் கோட்பாடு' என்ற நூல் வெளியானதும் பிரச்சினை இன்னும் பெரிதாக வெடித்துக் கிளம்பியது. **இந்நூலில் இவர் வேதாகமத்திலிருந்து 1251 மேற்கோள் களை எடுத்துக்கூறி பிதாவாகிய தேவன் உன்னதமானவன்; கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியும் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பதை வலியுறுத்தியுள்ளார்.** பின்னர் கிளார்க் பொதுப் பிரார்த்தனை நூல் ஒன்றை வெளியிட்டார். இயேசுவைக் கடவுளாக்கும் அத்தனேசியன் சமயப்போக்கையும், மற்ற முக்கடவுள் போதனைகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்நூலில் ஏகத்துவத்தை எடுத்தோதியிருந்தார். இந்நிலையில் தாமஸ்

எமிலின் பல்லாயிரக் கணக்கானோரை முக்கடவுள் வழிபாட்டிலிருந்து விடுவித்து, ஏக தெய்வக் கொள்கையின் பக்கம் திருப்பியவராய், 1714ல் இயற்கை எய்தினார்.

10. தியோஃபிலஸ் லிண்ட்சீ (1723-1808)

1723ல் பிறந்த இவர், இங்கிலாந்தில் முதன்முதலாக ஏகத்துவ வணக்கத்திற் கான ஓர் ஆலயத்தை நிறுவிய பெருமைக்குரியவர். சாமுவேல் கிளார்க்கைப் பின்பற்றி சீர்திருந்திய வழிபாட்டு முறையை செயல்படுத்திக் காட்டிய தீரர் இவர். அதாவது வழிபாடு நடத்தும்போது வழக்கமாக அணியப்படும் பெரிய அங்கியைத் தவிர்த்துவிட்டு, இலண்டன் எசக்ஸ் தெருவில் சாதாரண உடையில், ஏலம் விடுவதற்காக அமைந்த ஒரு சிறிய அறையில் (1774ல்) தமது முதல் வழிபாட்டை மிகச் சாதாரணமாக அரங்கேற்றினார். இதில் பெஞ்சமின் பிராங்ளின் என்ற அறிவியல் மேதையும், ஜோசஃப் பிரீஸ்ட்லீ போன்ற ஏகத்துவவாதிகளும் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

எஸக்ஸ் தெருவில் நடந்த வழிபட்டுக் கூட்டத்தைத் தொடர்ந்து பல கிறித்தவ ஆலயங்களில் அதே போன்று பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதற்கென ஏகத்துவ வழிபாட்டு ஆலயங்கள் பர்மிங்ஹாம், மான்ஸ்செஸ்டர் போன்ற பெருநகரங்களில் கட்டப்பட்டன. 1790ல் ஆக்ஸ்போர்டு மற்றும் கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர்களிடம் உரையாற்றிய லிண்ட்சி 'தேவனாகிய ஒரே இறைவனே உண்டு; அவனே எல்லாவற்றையும் படைத்துக் காப்பவன் ஆவான். புனிதர் இயேசு யூத குலத்தில் உதித்த ஒரு மனிதரே; அவர் தேவனின் ஊழியர் ஆவார்; மிகவும் மரியாதைக்குரியவரும் தேவனால் பிரித்தறியப் பட்டவரும் ஆவார். பரிசுத்த ஆவி ஒரு மனிதனோ, சுயமாக புத்திக் கூர்மையுள்ள படைப்போ அல்ல. ஆனால் அது இயேசு கிறிஸ்துவுக்கு வழங்கப்பட்ட அசாதாரணமான வல்லமையும், தேவனின் வெகுமதியும் ஆகும். இந்த பரிசுத்த ஆவி இயேசுவின் வாழ்நாளில் அவருடன் மட்டுமல்லாது அப்போஸ்தலர் களுடனும் ஆரம்பக் கால கிறித்தவர்களுடனும் சேர்ந்து இணைந்து செயல்பட்டது. (அப். நடபடிகள் 1:2)

இயேசு கிறிஸ்து தேவனல்லர் என்ற உண்மையை நிலை நிறுத்த லிண்ட்சி, கீழ்க்கண்ட கருதுக்களை ஆங்கில மக்களுக்கு மத்தியில் தமது எழுத்துக்கள் மூலம் பரப்பத் தொடங்கினார். இயேசு தம்மை தேவன் என்று ஒரு போதும் கூறவில்லை. பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் அனைத்தும் ஒரேயொரு தேவனையே- யெகோவா என்ற ஏக இறைவனையே - வலியுறுத்துகின்றன. அவனே அனைவரையும் படைத்தவன்; **யோவான் 5:17ல் மற்றொரு புதிய தேவனைக் குறித்து கூறுவதை நாம் நம்ப முடியாது. யோவான் இவ்வினோதக் கொள்கையை எங்கிருந்து பெற்றார் என்பது தெரியவில்லை. மேலும் இவ்வாறு கூறுவதற்கு அவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது...?** இயேசு யெகோவாவைத் தவிர வேறு எந்தக் கடவுளும் இல்லை என்று கூறியுள்ளதுடன், பிதாவினுடைய தூதனாகிய தமக்கு இடப்பட்ட கட்டளையை அவர் மக்களுக்கு எடுத்துரைத்து வந்தார். (யோவான் 12:49). சுவிஷேசங்களை எழுதியோர், பிதாவாகிய ஒரே உண்மையான தேவனை (கடவுளைக்) குறித்து பேசுகின்றனர். (யோவான் 17:3) மார்க்கு, மத்தேயு, லூக்கா ஆகியோர், இயேசு தேவன் என்பதற்கு ஒரு சிறு குறிப்பைக் கூடக் காட்டவில்லை. அவர்கள் இயேசுவை கடவுள் என்றும் இவ்வுலகைப் படைத்தவர் என்றும் அறிந்திருந்தால் அவ்வுண்மையை தமது சுவிசேஷங்களில் எடுத்துக் கூறாமல் விட்டிருப்பார்கள் என்பதை நம்மால் நம்பவோ கற்பனை செய்து பார்க்கவோ முடியவில்லை.

லூக்காவின் கருத்துப்படி, இயேசு பூமியில் மனிதராகப் பிறப்பதற்கு முன்னால், அப்படியொருவர் உயிர் வாழ்ந்தது இல்லை.

அவர் மரியாளுக்கு மகனாகப் பிறந்தவர் ஆவார். எனவேதான் லூக்கா இயேசுவின் வம்சாவழியைத் தமது சுவிசேஷத்தில் (3:23-38) எடுத்துரைத்துள்ளார். 4:24ல் இயேசுவை ஒரு தீர்க்கதரிசியாக அவர் அங்கீகரித்துள்ளார். மேலும் 7:16, 24:19 ஆகிய வசனங்களிலும் இயேசு ஒரு தீர்க்கதரிசி என அழைக்கப்பட்டுள்ளார். லூக்கா 17:24, 30ல் இயேசுவை மனித குமாரன் என்று குறிப்பிட்டு இவ்வுலகைப் படைத்த இறைவனின் ஆணைப்படி ஒரு முக்கியமான பணியை நிறைவேற்ற வந்தவரே இயேசு என்கிறார்.

இயேசுவை வணங்கி வந்தவர்களிடம் லிண்ட்சீ சில கேள்விகளைக் கேட்டார். அதாவது இயேசு அவர்களின் முன் தோன்றி அவர்களிடம் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டால் அவர்கள் என்ன பதில் சொல்வார்கள்? இதோ அக்கேள்விகள்:

1. நீங்கள் என்னை ஏன் வணங்குகிறீர்கள்?

2. என்னை வணங்குமாறு நான் உங்களை எப்போதாவது கேட்டுக் கொண்டேனா? அல்லது நான் எப்போதுமே பிதாவை வணங்கி உங்களுக்கு முன்மாதரியாக இருந்ததை நீங்கள் காணவில்லையா? (யோவான் 20:17)

3. என்னுடைய சீடர்கள், தேவனை வணங்குவதற்குரிய போதனையைத் தமக்கு வழங்குமாறு என்னிடம் வேண்டிய போது, நான் என்னையோ, பிதாவைத் தவிர வேறு யாரையோ, வணங்குமாறு கற்பித்தேனா? (லூக்கா 11:1-2)

4. நான் எப்போதாவது என்னைக் கடவுள் என்று அழைத்துக் கொண்ட துண்டா? அல்லது இவ்வுலகை உண்டாக்கியவன் நானே என்று கூறி, என்னை வணங்குங்கள் என்று உங்களிடம் சொன்னேனா?

11. ஜோசஃப் பிரீஸ்ட்லீ (1733-1804)

இவர் இங்கிலாந்து லீட்ஸ்க்கு ஆறு மைல் தென் மேற்கிலுள்ள ஃபீல்டுஹெட் என்ற சிறு கிராமத்தில் 1733ல் பிறந்தார். இவரது 6வது வயதிலேயே தாயார் காலஞ்சென்று விட்டார். தந்தை வீடுகளுக்குத் துணி தயாரித்து கொடுக்கும் சிறிய தொழில் செய்து வந்தார். வீட்டில் புராட்டஸ்டண்ட் முறைப்படி கடுமையான விதிகளைப் பின்பற்றுமாறு பணிக்கப்பட்டார். கிறித்தவ போதகராகும் எண்ணத்துடன் இருந்த இவருக்கு இலத்தீன், கிரேக்கு மற்றும் எபிரெய மொழிகள் கற்றத்தரப்பட்டன. பழங்கால வைதீக மூடக்கொள்கைகளை ஏற்றுக் கொள்ளா தவருக்கு இங்கிலாந்து பல்கலைக்கழகங்கள் இடமளிக்க மறுத்துவிட்டன. எனவே இவர் வேறு ஒரு சிறிய கல்விக் கூடத்தில் சேர்க்கப்பட்டார். இங்குதான் கிறித்தவ அடிப்படைக் கொள்கைகளின் மீது இவருக்கு ஐயம் ஏற்பட்டது. குறிப்பாக முக்கடவுள் கொள்கை மீது, ஐயம் ஏற்பட்டது. அதிக ஆழமாக பைபிளை அவர் ஆராய்ந்து பார்த்த போதும், முக்கடவுள் கொள்கைக்கு எதிரான தனது கருத்துக்களே சரியாய் இருக்கக் கண்டார். ஏகத்துவப் போராளிகளான ஏரியஸ், செர்விடஸ், சோசினி ஆகியோரின் கருத்துக்கள் அவரை ஏற்கனவே கவர்ந்திருந்தன. அவர்களைப் போன்று முக்கடவுள் கொள்கை மற்றும் பாவ பரிகாரக் கொள்கை போன்றவற்றுக்கு வேதாகம நூற்களில் எந்த ஆதாரமும் இல்லை என்ற முடிவுக்கு அவர் வந்தார். அதன் விளைவாக அந்தக் கல்விக் கூடத்திலிருந்து கற்றுத் தேர்ந்து வெளியேறும்போது, அவர் ஓர் உறுதியான 'ஏரியனாக' அதாவது ஏரியஸைப் பின்பற்று பவனாக இருந்தார்.

ஒரு கால கட்டத்தில் மதபோதகர் ஒருவருக்கு உதவியாளராக அவர் நியமிக்கப்பட்டிருந்த போது, இவர் ஏகத்துவ வீரரான ஏரியஸைப் பின்பற்றுகிறவர் என்ற உண்மை தெரிய வந்ததால், பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அடுத்து 1757ல் ஏரியஸைப் பின்பற்றியோர் உருவாக்கி இருந்த கல்விக் கூடத்தில் ஓர் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

ஒருமுறை அவர் இலண்டன் சென்றிருந்த போது பெஞ்சமின் ஃபிராங்ளின் என்ற அறிவியல் அறிஞரை முதல் முறையாகச் சந்தித்தார். அவர் ஓர் ஏகத்துவவாதி என்பதையும் புரிந்து கொண்டார். பின்னர் தமது ஊருக்கே திரும்பி வந்தவராய் ஏகத்துவக் கருத்தை விளக்கும் ஏராளமான கைப்பிரதிகளை அச்சிட்டுப் பொதுமக்களுக்கு மத்தியில் விநியோகித்தார். இதன் மூலம் மக்களுக்கு மத்தியில் ஏகத்துவவாதியாகப் பெரிதும் பிரபலமடைந்தார். இந்நிலையில் (1774ல்) அறிவியலில் அதிக நாட்டம் கொண்டிருந்த பிரீஸ்ட்லி ஆக்ஸிஜன் மற்றும் வேறு சில வாயுக்களைக் கண்டறிந்து வேதியியலில் சிறப்புகள் பல பெற்றார்.

சில காலம் பல்வேறு பணிகளில் அவர் ஈடுபட்டிருந்தாலும் இறுதியாக பர்மிங்காமில் 'கிறித்தவ மதத்தில் நுழைந்த களங்கங்களின் வரலாறு' என்ற மிக முக்கியமான நூல் ஒன்றை வெளியிட்டார். இந்நூல் இங்கிலாந்து கிறித்தவ திருச்சபையின் கோபத்தைப் பெருமளவில் கிளறி விட்டது. பிரீஸ்ட்லி இந்நூலில் முக்கடவுள் கொள்கையை மறுத்துரைத்தது மட்டுமின்றி, இயேசு ஒரு மனிதரே என்ற கருத்தையும் உறுதிப்படுத்தியிருந்தார். இயேசுவின் பிறப்பு பற்றிய விவரங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்ததாகக் கூறிய அவர், இயேசு மற்ற எல்லா மனிதர்களைப் போலவும் மனித இயல்புகளும், பண்புகளும் கொண்ட மனிதரே; மேலும் மனிதனின் இயலாமைகள் அனைத்தும் அவரிடம் இருந்தன. ஆயினும் இயேசு இவ்வுலகில் நல்லொழுக்க விதிகளை கற்றுக் கொடுக்க இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார் என்றெல்லாம் அவர் உறுதி படக் கூறினார். மேற்சொன்ன பிரீஸ்ட்லியின் அனைத்துக் கருத்துக்களையும் ஆங்கில அரசோ இங்கிலாந்து திருச்சபையோ ஏற்றுக் கொள்ள வில்லை என்பதில் வியப்பேது மில்லை.

பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக பாஸ்டைல் சிறை வீழ்ந்துபட்ட ஓர் ஆண்டு நிறைவு விழா. அப்போது இங்கிலாந்தில் ஒரு பிரிவு மக்களால் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வந்தது. பிரிஸ்ட்லியும் இப்பிரிவினரில் ஒருவர் என்ற தப்பெண்ணத்தினால் ஏற்பட்ட கலவரத்திலும் வன்முறையிலும் அவரது வீடு உடைத்து நொறுக்கப்பட்டது. அவரது நூலகமும் ஆய்வகமும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. தம் இன்னுயிரைக் காக்கும் பொருட்டு, பர்மிங்ஹாமை விட்டு மாறுவேடத்தில் பிரீஸ்ட்லி இலண்டனுக்குத் தப்பியோட நேர்ந்தது. அவரது ஓர் இறை கொள்கைப் பிரசாரத்தால் கோபம் கொண்டிருந்தவர்கள் இச்சூழ்நிலையை வெகுவாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றால் அதில் தவறில்லை. அவரது கருத்தை ஏற்றிருந்தவர்கள் கூட தமது சொத்துக்களை காத்துக் கொள்ள, ஒவ்வொருவரின் வீட்டிலும் தாங்கள் திருச்சபையைத் தான் ஆதரிக்கிறோம் என்பதைக் காட்டிக் கொள்ள 'திருச்சபையும் மன்னரும்' என்று எழுதி வைத்து வெறி கொண்டு அலைந்த கூட்டத்தாரிடமிருந்து தங்களைக் காத்துக் கொண்டார்கள்.

இச்சூழலில் தமது பிரச்சாரத்தைத் தொடர வேறு வழி ஏதுமின்றி மேதை பெஞ்சமின் ஃப்ராங்களினுடன் 1794ல் அமெரிக்கா சென்று ஃபிலடல்ஃபியாவிலும் அதைச் சுற்றிலும் ஏகத்துவவாதிகளுக்காக ஆலயங்கள் சிலவற்றை உருவாக்கினார். காலப் போக்கில் இங்கிலாந்தில் நிலைமை சீர்பட்டது. ஏகத்துவ வாதிகள் சிலர் ஒரு வணக்கத்தலத்தை அங்கு நிறுவினர்; பிரீஸ்ட்லி அதனைத் தொடங்கி வைத்து உரை நிகழ்த்த அழைக்கப்பட்ட போதிலும், தவிர்க்க முடியாத காரணங்களால் அவர் அங்கு செல்ல விரும்பாமல் அமெரிக்காவிலேயே தங்கியிருந்து 1804ல் இறையடி சேர்ந்தார்.

பிரீஸ்ட்லி மக்களுக்கு வழங்கியவை அனைத்தும் திட்டவட்டமான வரலாற்று அடிப்படையில் அமைந்த, தத்துவார்த்தமான வாதங்களாதலால் இவ்வாதங்கள் இறைவனின் ஏகத்துவத்திற்கு வலுவூட்டத் தக்கவையாக அமைந்திருந்தன. அவரது நூல்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நூலான 'கிறித்தவ மதத்தில் நுழைந்து விட்ட களங்கங்களின் வரலாறு', ஆரம்பக்கால கிறித்தவர்கள் ஒரே தேவன் மீதே நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதையும் அதிலிருந்து விலகிச் சென்று கிறித்தவம் ஏற்றுக் கொண்ட நம்பிக்கைகள் அனைத்தும் பிழையானவை என்பதையும் தெளிவாக்குகின்றது. இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் கிறித்தவ மக்களிடத்து கடும் கோபத்தை இந்நூல் கிளறி விட்டதால், ஹாலந்து உள்ளிட்ட நாடுகளில் பகிரங்கமாக இந்நூலின் பிரதிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

12. வில்லியம் எலர்ரி சேனிங் (1780 - 1842)

இவர் தமது 23ஆவது வயதில் பாஸ்டன் நகருக்கு வந்து ஒரு கிறித்த ஆலயத்தில் தமது பணியைத் தொடங்கினார். இவர் முக்கடவுள் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் இவர் தமது நம்பிக்கையை வெளிப்படையாக எடுத்துச் சொல்ல முடியாத சூழ்நிலை அங்கு நிலவியது. இருப்பினும், மற்ற ஏகத்துவவாதிகளுடன் சேர்ந்து இரகசியமாக முக்கடவுள் கொள்கைக்கு எதிரான தமது கருத்தைப் பரப்பி வருவதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அதற்குப் பதில் அறிக்கையில் சேனிங், தமது முக்கடவுள் கொள்கை பற்றிய கருத்தை ஒளித்து மறைத்து வைக்கவில்லை என்று கூறிவிட்டு, இக்கொள்கை கிறித்த வத்தின் ஆரம்ப காலத்தில் போதிக்கப் படவில்லை எனத் தெளிவாக எடுத்துரைத்தார். கிறித்தவர்கள் தங்களுக்குள் பிளவுபட்டுப் போகக் கூடாது என்பதற்காகவே அமைதியான முறையில் தாம் இக்கருத்தை எடுத்துரைத்து வருவதாகவும் இவர் தெரிவித்தார். இச்சமயத்தில் ஏகத்துவக் கொள்கை மக்களுக்கு மத்தியில் பரவத் தொடங்கிவிட்டது என்றால் அதில் தவறேதும் இல்லை.

சேனிங்கின் கருத்துப்படி, தேவன் தமது வேதாகமத்தில் முரண்பட்டுப் பேசுவதில்லை. மனிதன் தனது பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும் என்றும் இறைவன் அதைக் குறித்து மனிதனிடம் கேள்வி கேட்பான் என்றும் சேனிங் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். பாவ நிவர்த்தி மற்றும் பாவ பரிகாரக் கொள்கைகள் வேதாகமக் கருத்துகளுக்கு எதிரானவை என்பதை மக்களுக்கு எடுத்து கூறினார். ஒவ்வொருவரும் இறுதித் தீர்ப்பு நாளின்போது, தாம் செய்தவற்றுக்குப் பதில் கூற வேண்டும் என்றார். (2 கொரிந்தியர் 5:10). ரோமர் 14:10ல், ஒவ்வொருவரும் தமது செயல்களுக்கு இறைவனிடம் கணக்குக் காட்ட வேண்டுமென்று பொருள்படக் கூறப்பட்டுள் ளதை நினைவு படுத்தி விட்டு கீழ்க்கண்டவாறு சேனிங் தமது விளக்கத்தைத் தொடர்கிறார்:

இயேசு சிலுவையில் அறையப்பட்டதால் கடந்த கால, நிகழ்கால, வருங்காலப் பாவங்கள் தேவனால் மன்னிக்கப்பட்டு விடும் என்றால், மனிதர்களுக்கு நேர்வழி காட்டும் பொருட்டு நல்லொழுக்கப் போதனைகளையும் சரியான வாழ்க்கை முறையையும் தேவன் எடுத்துக் கூற வேண்டிய தேவையேயில்லை. அந்தப் பொறுப்பையும் வல்லமையையும் அவன் இழந்து விட்டான் என்றே சொல்ல வேண்டும். தனது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாதவர் களையும் ஒழுக்கங் கெட்டவர் களையும் தண்டிக்கும் திறனையும் அவன் இழந்து விடுவான் அல்லவா? தீர்ப்பு நாளில் பாவியான ஒருவனை தேவன் தண்டித்தால், அந்தப் பாவியின் நம்பிக்கைக்குப் பாதகமாக தேவன் நடந்துக் கொள்கிறான் என்றும் நாம் கூற வேண்டியது வரும். இவையே சேனிங்,

கிறித்தவ சமுதாயத் தின் முன் எடுத்து வைத்த கருத்துகளாம்.

1819 வரை ஏகத்துவவாதிகளின் கூட்டங்கள் தனிப்பட்டவர்களின் வீடுகளிலோ, பாஸ்டன் பார்கலே தெருவில் இருந்த மருத்துவக் கல்லூரி அரங்கத்திலோ நடத்தப்பட்டு வந்தன. 1820ல் ஏகத்துவவாதிகள் வழிபாடு நடத்துவதற்காக ஒரு கட்டடம் கட்டும் பணி தொடங்கி அடுத்த ஆண்டே அப்பணி நிறைவு பெற்றது. ஏகத்துவவாதிகள் உறுதியாகக் காலூன்றி விட்டார்கள் என்பதற்கு இவ்வழிபாட்டுத்தலம் ஓர் ஆதாரமாக அமைந்திருந்தும் இந்த ஏகத்துவவாதிகள், நாத்திகர்கள் என்றும் சமய விரோதிகள் என்றும் குற்றம் சுமத்தப்பட்டனர். 'ஏகத்துவக் கொள்கையின் வரலாறு' என்ற நூலில், சேனிங்கைக் குறித்து S.M. வில்பர் இவ்வாறு எழுதுகிறார்.

''வேதாகம நூற்களைப் பகுத்தறிவுடன் ஆராய்ந்து பார்த்தால், அவை ஏகத்துவ வாதத்தையே போதிப்பதாக சேனிங் கூறுகிறார்''.

வைதீக கிறித்தவர்களிடமிருந்து ஏகத்துவவாதிகள் வேறுபட்டு நிற்கும் மிக முக்கியமான கோட்பாடுகளை இந்நூல் ஒன்றன் பின் ஒன்றாக ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ளது. 1823ல் மசாசூ செட்ஸில் நடந்த ஏகத்துவ மாநாட்டின் விளைவாக அமெரிக்காவில் ஏகத்துவ வாதம் மேலும் வளர வழி ஏற்பட்டது. இவர்களை எதிர்த்த வைதீகக் கிறித்தவர்களின் முயற்சிகள் எல்லாம் தோல்வியில் முடிந்தன. எனவே ஏகத்துவவாதிகள் பகிரங்கமாக ஒன்று கூடித் தங்களின் கொள்கைகளைப் பரப்பத் தொடங்கி விட்டனர்.

1827ல் இரண்டாவது வழிபாட்டுத் தலத்தைத் திறந்து வைத்து சேனிங் தமது பிரபலமான உரையை நிகழ்த்தினார். இதற்கும் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. 1833ல் ஏகத்துவவாதிகள் மத விரோதக் கோழைகள் என்ற பெயரில் தாக்குதலுக்கு உள்ளாகினர். 1934ல் முப்பது அல்லது நாற்பது ஏகத்துவவாதிகள் பிரிட்டனில் ஒன்று கூடி ஒரு சங்கத்தை அமைத்தனர். அதற்கு பெயர் சூட்டப்படவுமில்லை. ஆரம்பக்கால ஏகத்துவ வாதிகளின் நிலை போல அல்லாமல், அப்போதைய ஏகத்துவவாதிகளுக்கு, தேவன் ஒருவன் என்ற நம்பிக்கை கொண்டிருத்தலே பெரும் ஆபத்தைத் தருவதாக இருந்தது.

சேனிங் தமது இறுதிக் காலம் வரையிலும் தமது ஏகத்துவக் கொள்கையில் நிலைத்து நின்றார். அவரைப் பொருத்தவரையில் இயேசு ஒரு மனிதர். அத்துடன் அவர் தேவனால் அனுப்பட்ட தீர்க்கதரிசியுமாவார். இயேசுவின் போதனையோ, பழைய ஏற்பாட்டுத் தீர்க்க தரிசிகளின் ஏகத்துவக் கொள்கையே ஆகும்.

முடிவுரை

இயேசு பிரான் போதித்த ஏகத்துவக் கொள்கை அதாவது இறைவன் ஒரே ஒருவன்; அவனே மக்கள் அனைவருக்கும் பிதா; அவனுக்குக் கூட்டாளிகள் யாருமில்லை; இறைவன் மூவராக இருக்கின்றான் என்ற கொடிய முக்கடவுள் கொள்கை பெரும்பிழையானது; மனித குலத்தை வழி கெடுக்கக் கூடியது; மனிதனால் உருவாக்கப்பட்டது என்ற இறை போதனைக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்கப் பாடுபட்டவர்களைப் பற்றி இதுவரை பார்த்து வந்தோம். இயேசு போதித்த ஏகத்துவக் கொள்கையை நிலைநிறுத்துவதற்கு முன்வந்தோர் பலர். அவர்களுள் பிஷப்மார்கள், சமய விற்பன்னர்கள் போன்றோரும் அடங்குவர். இறைவன் ஒருவனே என்ற கொள்கையை ஆதரித்து மக்களுக்கு சத்தியத்தை எடுத்துரைக்கும் முயற்சியில் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. இவர்களின் சிலர் நாடு கடத்தப்பட்டனர்.

வேறு சிலர் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டனர். இன்னும் சிலர் தீயிட்டுப் பொசுக்கப்பட்டனர். மற்றும் சிலர்

NABI VAZHI **Tamil Monthly December 2009**

Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211

கொல்லப்பட்டனர். ஏகத்துவத்திற்கு - ஒரே இறைவனை வணங்கும் கொள்கைக்கு - எதிரான இந்தப் போர், இயேசுவின் காலத்தை அடுத்துத் தொடங்கி இன்றுவரை தொய்வின்றி நடந்து வருவதைக் காலக்குறிப்புகள் நம் கண் முன்னே கொண்டு வந்து காட்டுகின்றன. உலகக் கிறித்தவ சமூகத்திலிருந்து எத்தனையோ அறிவியலார் தோன்றிய போதிலும், ஏகத்துவத்தின் பக்கம் அச்சமுதாயம் வந்துவிடாமல் தடுத்து நிறுத்தும் சக்தி ஏது? இயேசுவின் போதனை எதுவாயினும் சரி; எங்களின் தற்போதைய நிலையே சரியென்று அச்சமுதாயம் கூறுகின்றதா?

முக்கடவுள் கொள்கையே தவறானது; இயேசு பெருமானாரால் போதிக்கப்பட்ட கொள்கையல்ல அது என்ற பிரச்சாரப் பணி இன்றைக்குப் புதிதாகத் தொடங்கப்பட்டதல்ல என்பதை நம் கிறிஸ்தவப் பெருங்குடி மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். **இயேசு கிறிஸ்து என்னும் மாமனிதரின் உண்மையான போதனையின் பக்கம் இன்றைய கிறித்தவ சமுதாயம் திரும்ப வேண்டும்.** அவருடைய காலத்தில் அவரது உடன் பிறந்த சகோதரரும் மற்ற ஆதி அப்போஸ்தலர் சபையும் பவுலை எதிர்த்து நின்றதைப் போன்று, இயேசுவின் போதனையல்லாதவற்றை எதிர்க்கத் துணிய வேண்டும். கிறிஸ்துவென்னும் இயேசுவின் தூய போதனைகளின் பக்கம் அச்சமுதாயம் முகம் திருப்ப வேண்டும். அதன் மூலம் ஏகத்துவம் வெல்ல வேண்டும் என்பதே நம் ஆசையும், பிரார்த்தனையுமாம்.

(முற்றும்)

பார்க்கத் தவறாதீர்கள்!

தமிழன் தொலைக்காட்சியில்

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 8.00 மணி முதல் 8.30 மணி வரை ஒளிபரப்பாகும்

மாநபி (ஸல்) அவர்கள் தந்த உண்மை இஸ்லாம்

என்ற எமது நிகழ்ச்சியை காணத் தவறாதீர்கள்.

திருக்குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் இஸ்லாத்தின் உண்மை நிலையை விளக்கும் ஓர் அரிய நிகழ்ச்சி

மேலும் விபரங்களுக்கு

பிரசாரச் செயலர்,

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்

11, முதல் பிரதான சாலை, யு. ஐ. காலனி, கோடம்பாக்கம், சென்னை-600024

If undelivered please return to:

முகவரி : நிர்வாகி - **நபி வழி**

அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்

11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, கோடம்பாக்கம்,சென்னை-24. Ph : 24817174

Printed & Published By : **K. NASIR AHMED** From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Ph : 2481 7174. Editor : **O.M. MUZZAMMIL AHMAD**. Printed at : **Script Printers**, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.

டிசம்பர் - 2009 விலை ரூபாய் 7/-